விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 தை 17 திங்கட்கிழமை (31.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 043

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## போர்க் குற்றச்சாட்டு மறுப்பு

# 'நான் குற்றவாளியானால் தண்டனை அனுபவிப்பேன்'

## மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவிப்பு

(வாஷிங்டன்)

'நான் ஒரு போர்க் குற்றவாளியாக இருந்தால் ஒருநாள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அதற்குரிய தண்டனையை அனுபவிப்பேன்' என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதியும், புலிகளுடனான இறுதி யுத்தத்தின் போது போர்க்குற்றம் புரிந்தவர் என குற்றம் சாட்டப்பட்டவருமான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அமெரிக்காவிலுள்ள தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)



## காணிகள் பறிபோகும் அபாயம்

# இந்திய வெளியுறவுச் செயலருக்கு முறிகண்டி பிரதேச மக்கள் மகஜர்

(முறிகண்டி)

முறிகண்டி பிரதேசத்தில் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டிய பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படாமையினால் அங்குள்ள தமது காணிகள் பறிபோய்விடுமோ என்று அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அச்சம் வெளியிட்டிருக்கிறார்கள்.

தாமதமின்றி அந்தப் பகுதிகளில் தம்மை மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். இது தொடர்பாக இலங்கைக்கு வருகைதந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா ராவுக்கு மகஜர் ஒன்றையும் (20ஆம் பக்கம் பார்க்க)

## நிருபமா ராவ் இலங்கை வந்தார்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் நிருபமா ராவ் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படுவது குறித்து இந்திய அரசின் வன்மையான கண்டனத்தை தெரிவிப்பதுடன் இது போன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் (20ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

# ஜனாதிபதி மகிந்த-ரணில் தொலைபேசியில் பேச்சு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களில் பெரும்பாலானவை நிராகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் தரப்பிலிருந்து வெளியாகும் தகவல்களின்படி உள்ளூ (20ஆம் பக்கம் பார்க்க)

## வான்-மோட்டார் சைக்கிள் விபத்து

# இளைஞன் பலி; நண்பன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஹயஸ் வானும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துள்ளானதில் இளைஞன் ஒருவர் பலியானார், அவரது நண்பன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றிரவு 6மணியளவில் ஆவரங்கால் சந்திக்கும் வல்லைச் சந்திக்கும் இடையில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஜனசக்தி சிறுப்பிட்டியைச் சேர்ந்த இராசதுரை றஜீவன் (வயது 21) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது நண்பரான கலைஒளி சிறுப்பிட்டியைச் சேர்ந்த இராச துரை சர்மிலன் (வயது 21) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச் (20ஆம் பக்கம் பார்க்க)

## மாலை 6 மணிக்குப் பின் கூட்டமாக நிற்கத் தடை

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மாலை 6 மணிக்குப் பின் வீதிகளில் கூடும் இளைஞர்கள் கைது செய்யப்படுவார்கள் என சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக பண்டார அறிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதிகளில் அதிகளவான திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுவதாக முறையிடப்பட்டுள்ளது. இவற்றைத் தடுப்பதற்கு பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி சிந்திக பண்டார மேலும் கூறியதாவது, (19ஆம் பக்கம் பார்க்க)

## போர் வெடிக்கும் வைகோ எச்சரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர்களுக்காக தீக்குளித்து உயிர் தியாகம் செய்த முத்துக்குமார் மற்றும் 18பேரின் நினைவு அஞ்சலி பொதுக் கூட்டம் சென்னை பெரவள்ளூரில் நடைபெற்றது. ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ இதில் கலந்து கொண்டு கூறியதாவது,

இலங்கை தமிழர்களுக்காக உயிர் ஆயுதம் ஏந்தி தியாகச் செம்மலாக மாறிய தம்பி முத்துக்குமாரின் மரணம் தமிழ்நாட்டில் இளைஞர்களை தட்டி எழுப்பியுள்ளது. இலங்கை அரசுக்கு ஆயுதம் வழங்கி தமிழர்களை வீழ்த்த துணை போன மத்திய அரசின் துரோகத்தை மறக்க முடியாது. (19ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர்-மன்மோகன் நாளை சந்திப்பு

(சென்னை)

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று புதுடில்லிக்கு விஜயம் செய்துள்ள தமிழக முதலமைச்சர் கருணாநிதி பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்து இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்படும் விவகாரம் குறித்து கலந்துரையாட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பாக அனைத்து மாநிலங்களின் உள்துறை அமைச்சர்களின் மாநாடு புதுடில்லியில் நாளை நடைபெற (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை தோற்கடிக்க 4 வருடங்களில்

# அரசுக்கு 605 பில்லியன் ரூபாய் செலவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக 2006ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தில் 605 பில்லியன் ரூபாய் (6.5 பில்லியன் அமெரிக்க டொலர்) செலவிடப்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார். 2006 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பித்த யுத்தத்தில் வெல்வதற்காக 605 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் நடுப்பகுதியிலிருந்து விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடியும் வரை பாதுகாப்பு செலவினம் 2006 இல் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் ஆகவும் 2009இல் 1.7 பில்லியன் அமெரிக்க டொலராகவும் உயர்ந்தது.

நாட்டின் (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக பெப்.9இல் போராட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 9ஆம் திகதி கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## தமிழோசையை மூடும் திட்டத்திற்கு தடை

பி.பி.சி தமிழ் சேவையை மூடுவது தொடர்பிலான பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் திட்டத்திற்கு பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் தடை விதித்துள்ளார். பி.பி.சி தமிழ் சேவை உள்ளிட்ட ஐந்து மொழி சேவைகளை நிறுத்துவதற்கு ஊடக சேவை திட்டமிட்டிருந்தது.

எனினும் இந்த சேவைகளை முடக்க வேண்டாம் என பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார். தமிழ், பேர்சியா, வியட்நாம், இந்தோனேஷியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய மொழி சேவைகளை நிறுத்துவதற்கு பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டிருந்தது.

தமிழ் மற்றும் பேர்சியா ஆகிய முக்கிய சேவைகளை நிறுத்துவது கண்டிக்கப்பட வேண்டியதென பிரித்தானிய கன்சர்வேட்டிங் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அன்றூ ரொசின்டல் தெரிவித்துள்ளார். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு சட்டரீதியாக அணுகுவதில் சாத்தியமுண்டு!

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து சட்ட ரீதியாக அணுகுவதில் சாத்தியம் உண்டு என தாம் நம்புவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து நாம் தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்கள் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிராகரிக்கப்பட்டதாக வெளிவந்திருக்கும் செய்தி குறித்து எமது மக்கள் நம்பிக்கை இழக்கத்தேவையில்லை என்றும் நல்ல தீர்ப்பு கிடைக்கும் நம்பிக்கையோடு காத்திருங்கள் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

நாம் தேர்தலுக்காக தேர்தல் காலத்தில் மட்டும் செயற்படுகின்ற ஒரு கட்சி அல்ல;

ஆயினும் தேர்தல்கள் வரும் போது அவைகளில் போட்டியிட்டு அதில் கிடைக்கின்ற அரசியல் அதிகாரங் களை சரிவரப் பயன் படுத்தி எமது மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைச் சிறப்புடன் நாம் ஆற்றி வருகின்றோம்.

இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் எமது கட்சிக்கு வெற்றியை ஈட்டிக்கொடுத்து எமது வரலாற்று வாழ்விடங்களைத் தூக்கி நிறுத்த கரம் கொடுத்து உதவுவோம் என்று உற்சாகத்துடன் காத்திருந்த எமது மக்கள் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையினால் துயரத்தில் சோர்வடைந்து நம்பிக்கை இழக்கத் தேவையில்லை.

எமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து சட்ட ரீதியாக அணுகுவதில் சாத்தியம் உண்டு என்று நம்பும் நாம் இது குறித்து வழக்குத் தாக்கல் செய்வதற்கு தீர்மானித்திருக்கின்றோம்.

நீதியின் தீர்ப்பும் மக்களின் தீர்ப்பும் எமது நேர்மைக்கும் உழைப்பிற்கும் வெற்றிகளை வழங்கியே தீரும்! சத்தியங்கள் சாகாவரம் பெற்று வாழும்!

எதிர்பார்த்திருக்கும் நீதிமன்ற தீர்ப்பானது எமது மக்களின் வெற்றியாக அமையும் என்றே தாம் நம்புகின்றோம். எந்தவொரு சூழலிலும் எமது மக்களின் உரிமைக்கும் சேவைக்குமான உழைப்பும் பணியும் தடையின்றி தொடரும் என்று அதில் உள்ளது. (ச-5)

## கலாநிதி ஷமாமேத்ரே யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய சிந்மய கிராம அபிவிருத்தி திட்டப் பணிப்பாளரும் சேவைக்கான இந்திய ஜனாதிபதி விருது பெற்றவருமான கலாநிதி ஷமாமேத்ரே இன்று யாழ் வருகை தரவுள்ளார்.

இவர் நாளை செவ்வாய்க்கிழமை அன்று யாழ்.இந்து கலாசார மண்டபத்தில் (நாவலர் மண்டபம்) மாலை 2.30மணிக்கு "புனர்வாழ்வும் வலுவூட்டலும்" என்ற தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

ஆர்வம் உள்ள அனைவரும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இணையும்!

தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சி இடம்பெறும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய போதே இதை அவர் உறுதி செய்தார். நான்கு நாள் பயணம் ஒன்றினை மேற் கொண்டு நேற்று மாலை தமிழக முதல்வர் புதுடில்லி சென்றடைந்தார்.

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பா.ம.கவைத் தவிர காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் ஆகியவையும் இடம்பெறும் என்று கருணாநிதி கூறினார்.

தனது புதுடில்லி பயணத்தின் போது பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தியைச் சந்தித்து பேசும் போது காங்கிரஸ் கட்சியுடனான தொகுதிப் பங்கேடு குறித்து விவாதிக்கப்படும் எனவும் கருணாநிதி மேலும் தெரிவித்தார். (ச-5)

**வெள்ளிவிழா வாழ்த்து**



(31.01.1986-31.01.2011)

யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலையின்
பிரதி அதிபர் சிவஸ்ரீ.தியாக சோமஸ்கந்தராஜ குருக்கள்
திருமண வாழ்வில் வெள்ளிவிழா
கொண்டாடுவதனையிட்டு எமது
வாழ்த்துக்கள்

மணவாழ்வில் இருபத்தைந்து அகவையில்
மகிழ்வான காலங்கள்
இனிதான கோலங்கள்
இல்லற இன்பத்தில்
வெள்ளிவிழா காணுகின்ற
சோமஸ்கந்தராஜா தம்பதியரை
பதியின் அருள் பெற்று
பல்லாண்டு காலம்
பல் இன்பம் பெற்று வாழ
வாழ்த்துகின்றோம் போற்றுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/அம்பன் அ.மி.த.க.
பாடசாலை
குடத்தனை.
(C-2320)

**பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தேவை**

எமது இல்லத்திலுள்ள மாணவர்களுக்கு தரம் 8 முதல் 11 வரை தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு போன்ற பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்கள் எமக்கு உடனடியாக தேவையாகவுள்ளது. அருகாமையிலுள்ளவர்கள் நிர்வாக உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும். வேதனம் பேசி தீர்மானிக்கப்படும்.

தொ.பே.இல.
021 226 3520
021 321 5156

தர்மகர்த்தா சபையினர்
ஸ்ரீ பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம்
வதிரி, கரவெட்டி.
(சி-2321)

**நீங்களும் அறிவிப்பாளராகலாம்!**

சர்வதேச இணைய வானொலி வாரணம் FM இன்
ஒலிபரப்பாளர் இதழியல் பயிற்சிநெறி
யாழ்ப்பாணத்தில் விஷேட பிரிவு ஆரம்பம்!
தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

**ஒலிபரப்பாளர், இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறியில் இணைவதற்கு...**

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் விசேடசித்தியுடன் உயர்தரம் பல்கலைக்கழக அனுமதிக்கான பெறுபேறு.
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் இணைந்த சுயவிபரக்கோவையை 08.02.2011க்கு முன் எமது யாழ். அலுவலக முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி, வாரணம் எவ்.எம்.இல் பகுதிநேர ஒலிபரப்பாளர், களப்பயிற்சியும் கல்விச் சுற்றுலாவும்.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை தபால் மூலம் கற்பதாயின் விண்ணப்பத்தின் இடது மேல் மூலையில் "தபால் மூல இதழியல்" என குறிப்பிடவும்.

**வாரணம் FM**
No.58, Joseph Dias Mawatha, Modara, Colombo-15.
T.P No: 0112521281 E-mail: varanamfm@yahoo.com
Jaffna : Managing Director,
Varanam FM
20,Kannathiddy Road, Jaffna.
www.varanamfm.com

**செல்லா சினிமா**




ஆடுகளமா அசத்துறானய்யா...நம்மாழு..
காட்சி நேரம்: 10.30,2.30,6.30,9.30

**V.A.சிவராசா வெளியிட்ட 2011**
(3607)
புத்தாண்டுப் பலாபலன்கள்
பரபரப்பாக விற்பனையாகிறது. உங்கள் எதிர்காலம் பற்றிஅறிந்துகொள்ளுங்கள்.

**சேவை நலன் பாராட்டு**

திருமதி இந்திராணி கிருஸ்ணராஜா



அவர்கள்
யா/கோண்டாவில் பரஞ்சோதி
வித்தியாலயத்தில் சங்கீத
ஆசிரியராகக் கடமையாற்றி
31.01.2011இன்று தனது 53ஆவது
அகவையில் ஓய்வு பெறுகின்றார்.
திருமதி இந்திராணி கிருஸ்ணராஜா
அவர்களின் சேவையினை மனமார
வாழ்த்திப் பாராட்டுவதுடன் மேன்
மேலும் தனது குடும்பத்தினருடன் சீரும்
சிறப்பும் பெற்று பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச் சமூகம்.
(3592)

# இன்று ஒரு தகவல்

## நேர்மையின் வெற்றி

'வாழ்க்கையில் வெற்றிபெற என்ன வழி?'

இது ஒரு முக்கியமான கேள்வி.

இதற்கு எல்லோரும் பொதுவாக சொல்லும் பதில் 'உழைத்தால் வெற்றி பெறலாம்' என்பதுதான்.

'வாழ்க்கையில் வெற்றிபெற உழைப்பு மட்டும் இருந்தால் போதாது. நேர்மையும் வேண்டும்'

என்கிறார் போல் ஹாப்மேன்.

இவர் யார் தெரியுமா?

இவர் ஒரு பெரிய பொருளாதார நிபுணர், இரண்டாம் உலகப்போர் முடிந்த சமயம் இவர் அமெரிக்காவின் நிதி ஆலோசகராக இருந்தவர்.

தன் வாழ்க்கையில் நடந்த பழைய நிகழ்ச்சி ஒன்றைச் சொன்னார்.

சிறிய வயதில் படிப்பு முடிந்தவுடன் வேலை தேடிக்கொண்டிருந்தாராம். ஒரு கால்நடை வைத்தியரிடம் போய் வேலை கேட்டார்.

இவர் அங்கே போன சமயத்தில் அந்த டாக்டர் தன்னுடைய பழைய கார் ஒன்றை விற்பதற்காக வேறொருவரிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தார்.

வாங்க வந்தவர் இவரிடம் அந்தக் காரைப் பற்றிய விபரமெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார்.

கார் நல்ல நிலைமையில் இருக்குமா என்ற சந்தேகம் அவருக்கு வந்தது.

எல்லா விபரமும் கேட்டுக் கொண்டு கடைசியாகச் சொன்னார்.

"டாக்டர், இந்தக் காரை நீங்களே என்னுடைய ஊருக்கு ஓட்டிக் கொண்டு வரவேண்டும். கார் எந்தவித பழுதுமில்லாமல் என்னுடைய ஊருக்கு வந்து சேர்ந்துவிட்டால் அங்கேயே நான் பணம் கொடுத்து காரை வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

"நம்முடைய கார் அவ்வளவு தூரம் பழுதில்லாமல் போய்ச் சேருமா?" என்ற சந்தேகம் டாக்டருக்கு.

அவர் என்ன செய்தார் என்றால், தன்னிடம் வேலை கேட்டு வந்திருந்த பால் ஹாப்மேனை அழைத்து அவரிடம் சொன்னார்.

"இதோபார், நீ இந்தக் காரை அவருடைய ஊர் வரைக்கும் நல்லபடியாக ஓட்டிக்கொண்டு போய் சேர்த்துவிட்டால் உனக்கு நான் வேலை கொடுத்து விடுகிறேன்.

அது மட்டுமல்ல, கார் விற்ற தொகையில் கமிஷனும் தருகிறேன். சம்மதமா?" என்று கேட்டார்.

ஹாப்மேன் யோசித்தார். சரியென்று சொன்னார். உடனே அவரும் கார் வாங்க வந்தவரும் புறப்பட்டனர். இவர் மிகவும் சிரமப்பட்டு வழியில் எங்கும் நிறுத்தாமல் காரை ஓட்டிக்கொண்டு போய் சேர்த்துவிட்டார்.

அவர் இவரை அழைத்துக் கொண்டு வீட்டுக்குள் போனார். அதன்பின் கேட்டார்.

"இப்ப சொல்... இந்தக் காரின் நிலைமை எப்படியிருக்கிறது? நல்ல நிலைமையில் இருக்கிறதா? உன் மனசாட்சிப்படி பதில் சொல்" என்றார்.

இவர் உடனே கார் நல்லநிலைமையில் இருக்கிறது என்று சொல்வதற்காகத்தான் வாயைத் திறந்தார். அதற்குள் எதிரில் இருந்த சுவரைக் கவனித்தார்.

அங்கே இயேசுநாதரின் படம் மாட்டியிருந்தது.

அதில், "நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் இயேசு கவனித்துக் கொண்டிருக்கிறார்" என்று இருந்தது. அதைப் பார்த்தார்.

உடனே "கார் சரியில்லை" என்ற உண்மையைச் சொல்லி விட்டார்.

இவர் இப்படிச் சொன்னதும் அவர் இவரை மிகவும் ஆச்சரியமாகப் பார்த்தார்.

இவருடைய நேர்மை அவரை சிந்திக்க வைத்தது.

"உன்னுடைய நேர்மையைப் பாராட்டுகிறேன். உனக்கு கமிஷன் கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் இந்தக் காரை வாங்கிக் கொள்கிறேன்" என்றார்.

இவர் திகைத்துப் போய் நின்றார்.

மறுபடியும் அவர் சொன்னார்.

"நீ காரை ஓட்டிக்கொண்டு வரும் போதே உன்னுடைய திறமையைப் பார்த்தேன். உனக்கு விருப்பம் இருந்தால் நீ என்னிடமே வேலைக்குச் சேரலாம்" என்றார்.

பால்ஹாப்மேன் அவரிடமே வேலைக்குச் சேர்ந்தாராம். படிப்படியாக முன்னேறினாராம்.

அமெரிக்க நிதி ஆலோசகர் என்ற பதவிக்கு வந்த பின்னரும் அவர் இந்தப் பழைய சம்பவத்தை மறக்கவில்லை. அடிக்கடி சொல்வதுண்டு.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

வாழ்க்கையில் முன்னுக்கு வரவேண்டுமானால் உழைப்பு மட்டும் போதாது. நேர்மையும் வேண்டுமென்பது புரிகிறது.

இப்பொழுதெல்லாம் சிலபேரின் நேர்மை நமக்கு மிகவும் ஆச்சரியமாகக் கூட இருக்கிறது.

ஒரு புத்தகக் கடையில் ஒருத்தர் பலமணி நேரமாகத் தேடி ஒரு புத்தகத்தை எடுத்தார்.

அதற்கு பில் போடச் சொன்னார்.

பில்போடுபவர், "சேர், இந்தப் புத்தகம் சரியான அறுவை, மகாமட்டம். இது உங்களுக்கு வேண்டாம். வேறேதாவது ஒன்றை பாருங்கள்" என்றார்.

வாங்க வந்தவர் இவரை ஆச்சரியமாகப் பார்த்தார்.

"உங்களுடைய நேர்மையைப் பாராட்டுகிறேன். அதுசரி, இந்தப் புத்தகத்தை ஏற்கனவே நீங்கள் படித்துப் பார்த்துவிட்டீர்களா?" என்று கேட்டார்.

"அதைப் படித்து வேறு பார்க்கவேண்டுமா?" என்றார் அவர்.

"அப்படியானால் இதை எப்படி மகாமட்டம், மகா அறுவை என்று சொல்கிறீர்கள்?" என்றார் இவர்.

"அதை எழுதியதே நான்தான் சேர்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழக மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்

### மீன்பிடிவள அமைச்சர் குற்றச்சாட்டு

தமிழக மீனவர்கள் நாள்தோறும் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக மீன்பிடிவள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அவர்கள் இலங்கையின் மீன் வளத்தை மட்டும் எடுத்துச் செல்லவில்லை எனவும் முருகைக்கற் பாறைகளையும் அழித்துச் செல்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துமீறிய மீன் பிடியில் ஈடுபட்டு வரும் படகுகள் பல தமிழக அரசியல்வாதிகளுக்கு சொந்தமானவை எனவும் இதன் காரணமாகவே தமிழக அரசியல் வாதிகள் மீனவர்களுக்காகக் குரல் கொடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இரவு பத்து மணியளவில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிகாலை நான்கு மணியளவில் சென்று விடுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் போது இந்தியா இலங்கைக்கு பல்வேறு வழிகளில் பாரிய உதவிகளை வழங் கியுள்ளதாகவும் அவ்வாறான ஓர் பின்னணியில் இந்திய மீனவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக் கைகளை எடுப்பதில் சிக்கல் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா போன்ற நாடுகளுக்கு எதிராக செயற்படும் போது சில வரையறைகள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ)

# முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலகம் புனரமைப்பு

முல்லைத்தீவு வீதிஅபிவிருத்தி திணைக்கள அலுவலகம் 2 கோடி ரூபா செலவில் மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

யுத்தத்தினால் சேதமடைந்த இக்கட்டடம் வடக்கின் மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-10)

# 80 கலைஞர்களின் பங்களிப்புடன் அசோகா நாடகம் மேடையேற்றம்

திருமறைக் கலாமன்றத்தின் 22 மன்றங்களைச் சேர்ந்த மூவினக்கலைஞர்களும் ஒன்றிணைந்து நேற்று மருதானை எல் பிஸ்ரன் அரங்கில் அசோகா எனும் மௌன நாடகத்தினை மேடையேற்றியுள்ளனர்.

சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கடந்த 92 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டின் சகல இன மக்களையும் ஒன்றிணைந்து திருமறைக்கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் அமைதிக்கான 'அசோகா' எனும் நாடகத்தை மேடையேற்றி வந்துள்ளார். இதனை பல் நாட்டுத்தூதுவர்களும் பாராட்டியுள்ளனர்.

அவர்களின் வேண்டுகோளுக்கு இனங்கவே நேற்று 80 கலைஞர்களுடன் பிரமாண்டமான முறையில் அசோகா எனும் மௌன நாடகம் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் நெறிப்படுத்தலில் மேடையேற்றப் பட்டது. (ஸ்ரீ-3-51)

# அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 55 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 300 |
| தக்காளி | 60 | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 100 | 100 |
| கரட் | 110 | 100 | 120 | 110 |
| பூசணி | 35 | 50 | 50 | 30 |
| புடோல் | 70 | 100 | 120 | 90 |
| வாழைக்காய் | 35-45 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 250-300 | 280 | 280 | 270 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 140 | 180 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 140 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 70 | 30 |
| பயற்றங்காய் | 180 | 200 | 160 | 170 |
| லீக்ஸ் | 120 | 150 | 140 | 130 |
| பீற்றூட் | -- | 140 | 140 | 120 |
| கறிமிளகாய் | -- | 200 | 240 | 280 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | -- | 150. | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 120 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 40 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 40 | 60 | 50 |

# இராசி பலன்

31.01.2011

(தை 17, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு

திரியோதசி பின்னிரவு 6.32 மணிவரை

மூலம் முற்பகல் 11.15 மணிவரை

இராகு காலம் 8.06-9.36 மணிவரை

சுப நேரம் 12.36 - 2.06 மணிவரை

பிரதோச விரதம்

**மேடம்** தடைகள் அகன்று தனலாபம் பெருகும் நாள், உடல் சீராகி உற்சாகமடைவீர்கள், திடீர்பயங்களால் நன்மையுண்டு, சொத்துக்களால் சிறுதொகை கிடைக்கலாம்.

**இடபம்** மனக்குழப்பம் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தேகநலனில் கூடிய கவனம் எடுப்பீர்கள், பிரயாணத்தில் பொருட்களில் அவதானம் தேவை.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்வடையும் நாள்.

**கடகம்** உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், சச்சரவைவிட்டு சாதித்துக் காட்டுவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுவாரஸ்யமான நாள்.

**சிங்கம்** உள்ளம் மகிழும் வகையில் இல்லத்தில் சில சம்பவங்கள் நடைபெறலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், சுபகாரியச் பேச்சுக்கள் முடிவாகலாம் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கன்னி** அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல் வந்து சேரலாம், பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருட்சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** இடம், பூமி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றிதரும், நண்பர்கள் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் கவனம் செலுத்துவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உஷ்ண சம்பந்தமான நிலை ஏற்படலாம்.

**கும்பம்** உன்னதமான வாழ்க்கைக்கு வழி சமைத்துக் கொள்ளும் நாள், பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சியில் இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்** வாக்குறுதிகளைக் காப்பாற்றி மகிழும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்பு உங்கள் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடலாம்.

வளவன்





சாவகச்சேரி பொலிஸ் பிரிவினரால் மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பொது மக்களுக்கான நடமாடும் சேவையில் கலந்துகொண்டவர்களையும் பாடசாலை மாணவர் ஒருவரின் பெற்றோருக்கு தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ந.றஞ்சனா போஷாக்கு உணவுப் பொதி வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# அமாவாசைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இராஜரா ஜேஸ்வரி அம்பாள் ஆலய தை மாத அமா வாசைத் திருவிழா நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 5 மணிக்கு விசேட பூஜை களுடன் ஆரம்பமாகவுள்ளது.

இதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வந்து அருள்பாலிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# விழிப்புக்குழு தெரிவு

(பொற்பதி)

கிராமங்களில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப் படுத்தும் பொருட்டு இரவுநேர விழிப்புக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழி லாளர் கூட்டுறவு சங்க நிர்வாகத்தினர் தெரி வித்துள்ளனர்.

இவ்விழிப்புக்குழு பொற்பதி, குடத்தனை, மணற்காடு ஆகிய கிராமங்களில் அப்பகுதி கிராம மக்களின் பங்களிப்புடன் தெரிவு செய் யப்பட்டுள்ளது.

இதற்கு அப்பகுதி இராணுவத்தினரும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். (ஸ்ரீ-3-64)

# சங்காபிஷேகம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு வதிரி பீட விநாயகர் தேவஸ்தான சங்காபி ஷேகமும் திருவிழாவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிதொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கிரியா சிரோன்மணி சிவஸ்ரீ தி.சங்கரராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள தாக மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-3-51)

# நாட்டிற்கு முன்மாதிரியான வைத்தியசாலையாக திகழும் வல்வை ஊறணி வைத்தியசாலை

## வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு

(வல்வெட்டித்துறை)

நாட்டிற்கு முன்மாதிரியான வைத்திய சாலையாக வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலை மாறி வருவதாக யாழ்.பிராந் திய வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையின் வைரவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய ரீதியில் வைத்தியசாலைக்கான முகாமைத் துவப் போட்டியில் மாவட்ட வைத்திய சாலைக் கான பிரிவில் ஊறணி வைத்தியசாலை முதல் பத்து இடங்களுக்குள் வந்துள்ளதா கவும், அடுத்தகட்ட போட்டிக்கு தெரிவாகியுள் ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுகாதார அமைச்சினால் சுத்த மான முறையில் வைத்தியசாலைகளை கவனிப்பதில் தேசிய அளவில் முதன்மை வகிப்பதற்காக இரண்டுமுறை பாராட்டுப் பெற்றது.

அத்துடன் அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்த சுகாதார அமைச்சின் செய லாளர் மற்றும் அமைச்சர்கள் நேரில் சென்று பார்வையிட்டு மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி மயிலேறும் பெருமாளுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக உணவுக்கட்டுப்பாடுகளை மேற் கொள்வதாகவும் மருத்துவர்கள், ஊழியர்கள் சிறப்பாக இயங்குவதாகவும் இவ்வாறான காரணங்களாலேயே இவ் வைத்தியசாலை மென்மேலும் வளர்ச்சி அடைகின்றது.

அண்மையில் 6 கோடி ரூபாய் செல வில் இவ் வைத்தியசாலைக்கு கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

இந்த வைத்தியசாலை மென்மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்துக்களையும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-3-63)

# உதைபந்தாட்டப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி கோவிற் சந்தை கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் உதைபந்தாட்டப் போட்டி இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர் வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது.

வடமராட்சி விளையாட்டுக் கழகங் களுக்கிடையிலான அணிக்கு 5 பேர் கொண்ட போட்டியாக இப்போட்டி இடம் பெறவுள் ளது. (ஸ்ரீ-3-24)

# வருடாந்த ஒன்றுகூடலும் பிரிவுபசார நிகழ்வும்

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் பிரிவுபசார நிகழ்வும் இன்று காலை10 மணிக்கு கொக்குவில் மேற்கில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிரேஷ்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-9)

# வடமாகாண காணி அமைச்சு காரியாலயம் அரியாலையில்

(கொழும்புத்துறை)

காணி , காணி அபிவிருத்தி, விவசாய கால்நடை மற்றும் மீன்பிடி அமைச்சின் இரண்டு காரியாலயங்கள் அரியாலையிலு ள்ள புறூடி ஒழுங்கையில் இயங்கிவருகின் றது.

வடமாகாண காணி அமைச்சுக் காரி யாலமும் அமைச்சின் செயலாளர் காரியா லயமும் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக் கது. ள (ஸ்ரீ-3-51)

# வீதியை செப்பனிட்டு தருமாறு மக்கள் கோரிக்கை

(பொற்பதி)

பருத்தித்துறை மருதங்கேணி பிரதான வீதியின் அம்பன் வைத்தியசாலைக்கும் குடத்தனைச் சந்திக்கும் இடைப்பட்ட சுமார் 3 கிலோமீற்றர் வீதியானது மக்கள் போக்கு வரத்துச் செய்யமுடியாது குன்றும் குழியு மாக உள்ளது.

இதனால் மேற்படி வீதியூடாகப் போக்கு வரத்துச் செய்யும் மக்கள் பெரும் சிரமங் களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதி இரண்டு வாகனங்கள் ஒன்றை யொன்று விலத்திச் செல்ல முடியாத வீதியா கக் காணப்படுகின்றது.

மேலும் இவ்வீதியூடாகவே யாழ். குடா நாட்டுக்கான மண் விநியோகம் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இவ் வீதியை செப்பனிட்டு அகல மாக்கி போக்குவரத்தில் ஏற்படும் சிரமங் களைத் தீர்க்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-64)




# மணியம்தோட்டம் உதயபுரத்தில் மக்கள் விரைவில் மீள்குடியேற்றம்

(கொழும்புத்துறை)


மணியந்தோட்டம் உதயபுரத்தில் மக்கள் விரைவில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை நல்லூர் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

தற்போது மேற்படி பகுதிக்கு மக்கள் சென்று தமது வாழ்விடங்களைப் பார்வை யிட்டு துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் தொடக்கம் மீனவக் குடும்பங்களுக்கு குறைந்த விலையில் காணிகள் விற்பனை செய்யும் நடவடிக்கை களும் நடைபெற்று வருகின்றது.

மேற்படி உதயபுரத்தில் கடந்த காலத் தில் 200 குடும்பங்கள் வரை குடியிருந்த னர்.

புனித செபஸ்தியார் கோவில், றொசாறி யன் ஆயுர்வேத வைத்தியசாலை என்ப னவும் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக் கது. (ஸ்ரீ-3-51)



யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையில் தரம் 2 மாணவரை தரம் 3 இற்கு வரவேற்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சி.இராஜவரோதயம் மாணவி ஒருவருக்கு அன்பளிப்பு வழங்குவதைப் படத்தில் காணலாம். (படங்கள்:-சுன்னாகச் செய்தியாளர்)

# ஈ.பி.டி.பி.அமைப்பாளரின் இறுதிநிகழ்வு நேற்று நடைபெற்றது

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு ஈழமக்கள் ஜனநா யகக் கட்சியின் அமைப்பாளர் இ.சதீஸின் இறுதி அஞ்சலி நிகழ்வு பல்லாயிரக்கணக் கான மக்கள் புடைசூழ நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி அதிபர் மற்றும் வடம ராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர், வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ஆகியோர் அஞ் சலி உரை நிகழ்த்தினர். (ஸ்ரீ-3-64)



யாழ். கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையின் பாடசாலை தினமும் பரிசளிப்புவிழாவும் நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாண்ட் வாத்திய சகிதம் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பாடசாலை அதிபர் கா.சசிதரன் தலைமையுரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் மாணவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.
(படங்கள் :-என்.குமார்)

# குடிபோதையில் வாகனங்கள் ஓட்டுவதை தடுக்கும் வகையில் புதிய கார் அறிமுகம்

(கொழும்பு)

தற்போது மது அருந்தி விட்டு குடிபோதையில் வாகனங்கள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. இதனால் வீதி விபத்துகள் அதிகரித்து பலரின் உயிர்கள் பறிபோகின்றன. அதைத் தடுக்கும் வகையில் புதிய வகை சுப்பர் கார் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கார் குடிபோதையில் இருக்கும் சாரதியைக் கண்டுபிடித்துத் தருகிறது. இந்த அதிநவீன காரில் மனித உடலின் உணர்வுகளைப் பதிவு செய்யக்கூடிய கருவி பொருத்தப்பட்டுள்ளது. சாரதியின் மூச்சுக்காற்று அல்லது தோல் பகுதியின் உணர்வு மூலம் சாரதி குடிபோதையில் இருக்கிறாரா? என்பதை கண்டறிய முடியும்.

இது தவிர காரின் சக்கரங்களை இயக்க கூடிய ஸ்டீயரிங் மற்றும் கதவு பூட்டுகளிலும் பொருத்தலாம். அதன் மூலம் சாரதியின் இரத்தத்தில் கலந்து இருக்கும் அற்ககோலின் விகிதத்தை கண்டறிந்து அவர் போதையில் உள்ளாரா? என கண்டறிய முடியும்.

குடிபோதையில் இருப்பது தெரிந்தால் காரை ஓட்ட அந்த சாரதியை அனுமதிக்காமல் வேறு ஒருவரை ஓட்டச் செய்யலாம். இந்தக் கார் வெள்ளோட்டச் சோதனை இடம் பெற்றது. அமெரிக்காவில் உள்ள வால்கம் நகரில் நடந்த இந்த சோதனை ஓட்டத்தை அமெரிக்க போக்குவரத்து செயலாளர் ராய் லாகூட் நேரில் வந்து பார்த்தார்.

இக்காரை தயாரித்த நிபுணர்களை அவர் வெகுவாக பாராட்டினார். இந்த புதிய முயற்சிக்கு மக்களிடையே வரவேற்பும் பாராட்டும் கிடைத்துள்ளது. இது போன்ற காரை புழக்கத்தில் விடவேண்டும் .இதன் மூலம் பல உயிர்கள் காப்பாற்றப்படும் என தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# காங்கிரஸ் கட்சி நாடகம் ஆடுகிறது

## சீமான் தெரிவிப்பு

வேதாரண்யத்தை அடுத்த புஷ்பவனம் கிராமத்தில் இலங்கை கடற்படையால் படுகொலை செய்யப்பட்ட மீனவர் ஜெயக்குமாரின் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்வதற்காக நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் சென்றார்.

ஜெயக்குமார் மனைவி முருகேஸ்வரி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி ரூ.10 ஆயிரம் நிதியுதவி வழங்கியுள் ளார்.

முன்னதாக வேதாரண்யம் வருகை தந்து ராஜாஜி பூங்காவில் அமைந்துள்ள பெரியாரின் சிலைக்கு சீமான் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அவ்வேளையில் சீமான் உரையாற்றுகையில்,

மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சி நாடகம் ஆடுகிறது. வரும் தேர்தலை கருத்தில் வைத்து போராட்டம் நடத்துவோம் என்று இளைஞர் காங்கிரசார் கூறுகிறார்கள். அதுபோல் தமிழக அரசும் இறந்த மீனவர் குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.

இவர்கள் இருவருமே தேர்தலை மனதில் வைத்து நாடகம் ஆடுகிறார்கள். இதை பொது மக்களும் மீனவர்களும் மற்ற கட்சிகளும் உணர வேண்டும். வரும் தேர்தல் ஒரு நல்ல முடிவை தரும் என்றார். (ஸ்ரீ-2)

# இந்தியாவில் இலங்கை அகதி ஒருவர் தீக்குளித்து மரணம்

இந்தியாவில் உள்ள இலங்கை அகதி ஒருவர் தீக்குளித்து மரணமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மதுரை கூடல் புத்தூர் முகாமில் தங்கியிருந்த செல்வராஜ் என்ற நபரே தீக்குளித்து மரணமடைந்துள்ளார்.

குறித்த நபர் குடும்ப பிரச்சினை காரணமாகவே தீக்குளித்துள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# பல்கலைக்கழகங்களில் அமைதியின்மையை உண்டாக்குவதற்கு சிலர் முயற்சி

(கொழும்பு)

சில பல்கலைக்கழக மாணவர்களின் தூண்டுதலினால் பல்கலைக்கழகங்களில் அமைதியின்மையை உண்டாக்க சிலர் முயற்சித்து வருவதாக இணையத்தளமொன்றிற்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

2011 உலகக் கிண்ணத்திற்கு தொண்டராக செயலாற்றிய பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கடந்த வெள்ளிக்கிழமை தாக்கப்பட்டு கத்திக்குத்துக்கு இலக்காகினர்.

இவர்களை மாத்தளை வைத்தியசாலைக்கு பார்வையிடச் சென்ற றுகுணு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் முகமூடி அணிந்த கும்பலொன்றினால் தாக்கப்பட்டதாக அவர் கூறினார்.

றுகுணு பல்கலைக்கழக மாணவச் சங்கத் தலைவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சட்ட நடவடிக்கையினால் இவர் பின்னர் விடுவிக்கப்பட்டதாக சஞ்சீவ பண்டார குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பொலிஸில் நாம் முறைப்பாடு செய்தோம். சில பேரை பெயர் குறிப்பிட்டும் சொல்லியுள்ளோம். ஆனால் பொலிஸார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லையென சஞ்சீவ பண்டார தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# தெற்காசிய பொருளாதார அமைப்பின் செயலகம் பங்களாதேஷில்

(கொழும்பு)

பிம்ஸ்டிக் எனப்படும் தெற்காசிய பொருளாதார அமைப்பின் செய லகம் பங்களாதேஷில் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த செயலகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு ஐந்து ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

பிம்ஸ்டிக் அமைப்பின் 13ஆம் அமைச்சர்களின் மாநாடு அண்மையில் மியன்மாரில் நடைபெற்ற போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சு சரியான முறையில் போட்டியிடாத காரணத்தினால் பிம்ஸ்டிக் தலைமையகத்தை இலங்கையில் நிறுவுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)


திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் தை மாதம் 24ஆம் திகதி (07.02.2011) திங்கட்கிழமை சதுர்த்தி திதியும், உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 09.36 மணி முதல் 10.30 மணி வரையுள்ள மேஷ லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

வல்வெட்டித்துறை
ஆலடியைச் சேர்ந்த
அகமணிதேவர் வித்தியாநாயகி
தம்பதிகளின்
சிரேஸ்ட புத்திரன் திருநிறைச் செல்வன்
மதுசூதனன்
அவர்களுக்கும்

வல்வெட்டித்துறை
ஏ.ஜி.ஏ.ஒழுங்கையைச் சேர்ந்த
குகன் அமிர்தலட்சுமி
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி திருநிறைச் செல்வி
வாசுகி
அவர்களுக்கும்

வல்வை நெடியகாட்டு திருச்சிற்றம்பலப்பிள்ளையார், வல்வை வைத்தீஸ்வரர், வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவருள் துணை கொண்டு திருமணம் நடத்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருச்சி பெமினா ஹோட்டல் லோட்டஸ் மண்டபத்தில் திருமணம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்து பசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி. அகமணிதேவர்
இல.13,2ஆவது குறுக்குத்தெரு,
சுந்தர்நகர், திருச்சி-21.
தொலைபேசி: 0091-97903 66835
0091-88708 40063

திரு.திருமதி.குகன்
இல.20/2, 2ஆவது குறுக்குத்தெரு,
தேவராய நகர், திருச்சி-21.
தொலைபேசி: 0091-43123 52069
0091-90034 45483

(இருவீட்டார் அழைப்பு)

(சி-2319)

சாவகச்சேரி றோ.க.த.க. வித்தியாலய தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் அதிபர் திருமதி தயாசக்தி பாலசுப்பிரமணியம் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலய சமூகக் கல்வி பாட ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# சுயேட்சையாக போட்டியிட ஆளும் கட்சியினர் முயற்சி

(கொழும்பு)

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் சுயேட்சையாக போட்டியிடுவதற்கு ஆளும் கட்சியினர் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுயேட்சைக் குழுக்களில் போட்டியிடும் தரப்பினருக்கு ஆதரவளித்து அவர்களை வெற்றி பெறச் செய்ய ஆளும்கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேட்புமனு நிராகரிக்கப்பட்ட தொகுதிகளில் வழக்குத் தொடர்வதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் நீதிமன்றில் சாதகமான தீர்ப்புக் கிடைக்கப்பெற்றால் நிராகரிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களையும் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக ஒத்திவைக்கப்பட்ட திகதியில் நடாத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையில் தயாரான ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்க நடவடிக்கை

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இராணுவத் தளபாடங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யத் தயாராகவுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.


புலிகளுக்கு எதிரான போரில் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்கவுள்ளதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஆளில்லாத சிறிய உளவு விமானமும் இவற்றில் அடங்கும். பொது நிகழ்ச்சிகள், கூட்டங்கள் என்பவற்றை கண்காணிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைக்கும் இவ்விமானம் உதவக்கூடியது.

மார்ச் 31 முதல் யூன் 2ஆம் திகதி முதல் இலங்கையில் இராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புலிகளை தோற்கடித்த அனுபவங்களை பகிர்ந்துகொள்வதற்கான சர்வதேச மாநாட்டிற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு இந்த இராணுவத் தளபாடங்கள் காட்சிப்படுத்தப்படும் என இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

இராணுவத்தைத் தவிர கடற்படை, விமானப்படை ஆகியனவும் தாம் தயாரித்த சில ஆயுதங்களை காட்சிப்படுத்தவுள்ளன. (ஸ்ரீ-2)

# நாசா வெளியிட்ட அரிய படங்கள்



நாசா விண்வெளி ஆய்வு மைய தொலைநோக்குக் கருவி மூலம் விண்வெளியை மிகவும் நுண்ணிய முறையில் அவதானித்துள்ளது.

இதன்மூலம் தூசு, துணிக்கைகள் உட்பட விண்வெளியில் காணப்படும் அனைத்துப் பொருட்களும் ஆராயப்பட்டிருக்கின்றன.

அவதானங்களை புகைப்படத் தொகுப்பாக கடந்த வருட இறுதியில் வெளியிட்டும் உள்ளது.

இப்படங்கள் மிகவும் அழகானவை. உலக மக்கள் மத்தியில் இப்படங்களுக்கு மிகுந்த வரவேற்புக் கிடைத்துள்ளது. (ஸ்ரீ-2)

# 65 புதிய நீதிமன்றங்கள் திறந்து வைக்கப்படும்

## வழக்கறிஞர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

தேங்கியுள்ள வழக்குகளைத் துரிதமாக மேற்கொள்ளும் நோக்கில் 65 புதிய நீதி மன்றங்கள் திறந்து வைக்கப்படும் என வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் ஷிப்லி அசீஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்த நிலையில் ஆசிய சட்ட வர்த்தக மாநாடு கொழும்பில் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இம்மாநாடு பெப்ரவரி மாதம் 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன என்றும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மன்னார் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி பணிகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கடந்த வருடம் 199 கோடியே 60 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நகரப்புற மற்றும் கிராமப்புற வீதிகள் புனரமைப்புக்கு குடிநீர் விநியோகத்திட்டங்கள், சனசமூக மின்சார விநியோகம், விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடித்துறை ஆகியனவற்றின் அபிவிருத்திக்கு செலவிடப்பட்டுள்ளன.

இது தவிர பாடல்பெற்ற தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்காக குறிப்பிட்ட தொகையில் 25 கோடி விசேடமாக இந்தத் திருப்பணிக்காக செலவிட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# வெடிபொருட்கள் குறித்து அவதானமாக செயற்படுமாறு பாதுகாப்பு தரப்பினர் கோரிக்கை

(கொழும்பு)

வெடிபொருட்கள் குறித்து தொடர்ந்தும் அவதானமாக செயற்படுமாறு பாதுகாப்பு தரப்பினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த யுத்த காலத்தில் கொழும்பில் தாக்குதல் நடத்துவதற்காக கொண்டு வரப்படவிருந்த வெடிபொருட்கள் பல்வேறு பிரதேசங்களில் இன்னமும் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என இராணுவ ஊடகப் பேச்சாளர் உபயமெதவல தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் தகவல்களுக்கு அமைய நேற்று முன்தினம் 2 கிலோ கிராம் எடையுடைய கிளைமோர் குண்டொன்று நிட்டம்புவ பிரதேசத்தில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி, விஸ்வமடு, ஐயனார் கோவில் வீதியில் வடிகால் ஒன்றிற்கு அருகே சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொண்ட போது கிளைமோர் குண்டொன்று திடீரென வெடித்துள்ளது.

இதன்காரணமாக இரண்டு பேர் காயமடைந்தனர். 250 கிராம் எடையுடைய பழைமையான கிளைமோர் குண்டு கடந்த 28ஆம் திகதி மாலை வெடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த வவுனியாவைச் சேர்ந்த முகுந்தன் ரமணன் வயது 19 என்ற இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

காயமடைந்த மற்றைய நபர் யாழப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# சிலாபம்-கொழும்பு பேருந்து சேவைகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

சிலாபம், கொழும்பு 4ஆம் வழி இலக்க தனியார் பயணிகள் பேருந்து சேவையாளர்கள் நேற்று சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பு-நீர்கொழும்பு தனியார் பயணிகள் பேருந்து ஊழியர்களுக்கும் சிலாபம்-கொழும்பு ஊழியர்களுக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலையை அடுத்தே இந்த சேவை புறக்கணிப்பு இடம் பெற்றது.

சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் தனியார் பேருந்துகளுக்கு நீர்கொழும்பு பிரதேசத்தின் ஊடாக பயணிக்க தாம் அனுமதிக்கப்போவதில்லை என வட மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருந்தார்.

இதன் காரணமாக பொது மக்கள் அசௌரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ன தெரிவிக்கையில்,

எவ்வாறாயினும் குறித்த முறுகல் நிலை குறித்து உரிய தரப்பினருடன் இன்றைய தினம் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# பௌர்ணமி கலை விழா

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாதந்தோறும் நடத்தப்படும் பௌர்ணமி கலைவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வவுனியா தெற்கு கல்வி அலுவலகத்தில் நடைபெறும் என வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# ஜனாதிபதி மகிந்தவின் தலைமையே போரின் வெற்றிக்குக் காரணம்!

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது படைத்துறையினர் கடைப்பிடித்த தந்திரோபாயங்கள் குறித்த தெளிவு நாட்டின் அரசியல் தலைமையிடம் இருந்ததாலேயே போரை வெற்றி கொள்ளக் கூடியதாக இருந்ததாக படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் களநிலைமைகளை படைத்துறை சார் நோக்கோடு ஆராயக்கூடிய திறமை காணப்பட்டிருக்காவிட்டால், சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிந்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் தோற்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் கூறியுள்ளார்.

படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறியதாக THE NATION எனும் ஆங்கில ஊடகத்தில் Egagani Weerakoon எழுதிய செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செய்திக் கட்டுரையின் முக்கியமான பகுதிகளை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

விடுதலைப்புலிகளுடனான போரின் போது கடந்த காலத்தில் நாம் தோல்விகளைச் சந்திப்பதற்கு வழிவகுத்த காரணங்கள் குறித்து தெளிவாக ஆராய்ந்து அத்தகைய தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாதவாறு நாங்கள் பார்த்துக்கொண்டோம்.

இதன் காரணமாகவே அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீதான தாக்குதல் மற்றும் முகமாலைப் படுதோல்வி ஆகிய தோல்விகளின் பின்னரும் நாம் விட்டுக் கொடுக்காது படை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்தோம்.

அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீதான தாக்குதலில் படைத்தரப்பினர் பல வான் கலங்களை இழந்திருந்ததோடு முகமாலை தாக்குதலில் 125 படையினரை இழந்திருந்தோம்.

முப்படைகளின் தளபதி என்ற வகையில் நிலைமைகளைச் சரியாக கணிப்பீடு செய்து முடிவெடுக்கும் திறமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இல்லாதிருந்திருந்தால், தோல்விகளைக் கண்டு துவண்டிருப்போம். போரை முடிபுக்குக் கொண்டுவந்து விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஜனாதிபதி அழைத்திருப்பார். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.


மகிந்த ராஜபக்ஷ

அத்துடன், நேரத்திற்கும், தருணத்திற்கும் ஏற்றவகையில் சரியான முடிபுகளை எடுத்தும் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்வதற்கு உதவி புரிந்த இன்னொரு அம்சம் சித்தாந்தங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் மட்டும் கட்டுப்பட்டு செயற்பட முடியாத சந்தர்ப்பங்களும் உண்டு. சித்தாந்தங்களின் அடிப்படையில் மட்டும் முடிவுகளை மேற்கொள்ளாது, களநிலைமைகளுக்கு ஏற்றவகையில் நடைமுறைச் சாத்தியமான முடிபுகளை எடுக்க வேண்டிய நிலைமைக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்.

களநிலைமைகளை ஒவ்வொரு கோணத்திலும் ஆராய்ந்து நிலைமைகளை அதற்கு ஏற்ற வகையில் தந்திரோபாயமான முடிபுகளை எடுக்கும் மனவுறுதி எங்களிடம் இருக்க வேண்டும்.

களநிலைமைகளின் தேவைகளுக்கு ஏற்ப விடுதலைப்புலிகளுக்கு கால அவகாசத்தினைக் கொடுக்காத வகையில் படைத்தரப்பினரை விரைவாக நகர்த்தி நாங்கள் போரிட்டதின் விளைவு தான் நாங்கள் போரில் பெற்ற வெற்றி. இவ் வெற்றிதான் எமது ஆட்சியின் மீது மக்களின் நம்பிக்கை வலுப்பெறுவதற்கு காரணமாக இருந்தது. இந் நம்பிக்கைதான் உறுதியான ஆட்சியினை நாம் முன்னெடுப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தந்தது.

முன்னைய அரசாங்கங்கள் தேவைக்கு ஏற்ற வகையில் படைத்துறையை நவீனமயப்படுத்துவதற்கு முனையவில்லை. இந்த நிலையிலேயே தமிழீழவிடுதலைப்புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற உறுதியான ஒரு முடிபை ஜானதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொள்வதற்கும், அவர்களிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களை தொடர்ந்து தக்கவைப்பதற்கு வழிசெய்யும் வகையில் அனைத்து வளங்களையும் தயக்கமின்றி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொடுத்தார்.

படைத்தரப்பில் இருந்த ஆட்பற்றாக்குறையினை நாங்கள் சுட்டிக்காட்டிய போது, புதிய ஆட்திரட்டல்களை மேற்கொள்வதற்கான அனுமதியினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கி இருந்தார்.

போரில் ஈடுபட்டால் உயிர் இழந்துவிடுவோம் அல்லது உடல் உறுப்புக்களை இழந்து விடுவோம் என்ற எண்ணத்தை மாற்றும் வகையில், இளைஞர்கள் படைத்தரப்பில் இணைந்து கொள்வதைத் தூண்டும் வகையில் விசேட திட்டங்களை வகுத்த போது, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் படைத்தரப்பில் இணைந்து கொண்டார்கள்.

அத்துடன், இவ்வாறு படைத்தரப்பில் இணையும் படையினருக்கான நலவாழ்வுத்திட்டங்களை முன்னெடுப்பது எனவும் நாங்கள் அப்போது முடிபு செய்திருந்தோம்.

படையினருக்கான நலவாழ்த்திட்டங்களை மேம்படுத்தும் வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டதுடன், படையினரின் தேவைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வரும் வகையில் பரப்புரைகளையும் முன்னெடுத்தோம்.

சரியான திட்டமிடல் மற்றும் உறுதியான நடவடிக்கைகள் மூலம் படைத்துறை சார் ஆளுமைகளை வளர்த்ததோடு, படைத்தரப்பு சார்ந்து மேற்கொள்ளப்பட்ட உளவியல் போரையும் தோற்கடித்தோம்.

அத்துடன், களத்தில் மூர்க்கமாக போரிட்டுக் கொண்டிருந்த படையினரின் நலன்களை கவனிப்பது தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக நாம் மேற்க்கொண்ட தொடர்ச்சியான தாக்குதல்களின் போது தவறுகள் ஏற்படும் இடத்தில் அத்தவறுகளை திருத்திக்கொண்டு மீண்டும் அந்தத்தவறுகள் இடம்பெறாத வகையில் தாக்குதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் வான்வழியாக தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சம் இருந்த போது அதனை முறியடிக்கும் வகையில் விமானப்படையினரும் உசார்நிலையில் இருந்தனர்.

விடுதலைப்புலிகளின் முதலாவது வான்வழித்தாக்குதல் இடம்பெற்ற பின்னரே தாழ்வாகப் பறந்து தாக்குதலை நடாத்தும் விமானங்களை முறியடிக்கும் வல்லமை எங்களிடம் இல்லை என்பதை நாம் புரிந்து கொண்டவுடன், தாழ்வாகப் பறந்து தாக்குதல்களை மேற்கொள்ளும் எதிரியின் விமானங்களை இலக்கு வைப்பதற்கு ஏற்ற வகையில் விமான எதிர்ப்புப் பீரங்கிகளைத் தயார்நிலையில் வைத்திருந்தோம்.

அதேவேளை படைநடவடிக்கையின் போது இந்திய அரசாங்கத்தின் அழுத்தங்கள் காரணமாக, படைநடவடிக்கைகளை நாம் பல முறை இடைநிறுத்தியிருந்தோம். இந்தியாவின் அழுத்தங்களை அடுத்தே வடமராட்சி மீது முன்னெடுக்கப்பட்ட படை நடவடிக்கை நிறுத்தப்பட்டது.

இத்தகைய நெரிக்கடி நிலை ஏற்படாதவாறு இந்தியாவுடன் இம்முறை சிறந்த உறவைப்பேணியதோடு, அவர்களின் இத்தகைய அழுத்தங்களைப் பொருட்படுத்துவதில்லை என்ற தீர்மானத்தையும் நாம் எடுத்திருந்தோம். இலங்கையின் அரசியல் நிலைமைகள் தமிழ் நாட்டின் மீது அதிக செல்வாக்கினை செலுத்தும் என்பதாலேயே இந்தியா தலையிட முனைந்தது. இந்நிலையில், நாங்கள் மூவர் அடங்கிய உயர்மட்டக் குழுவொன்றை நியமித்திருந்ததோடு, இந்திய அரசாங்கமும் வெளிவிவகார அமைச்சர் உட்பட மூவர் அடங்கிய குழுவொன்றை நியமித்திருந்தது.


எங்களுடைய படைநடவடிக்கைகள் குறித்து சிறிலங்காவின் மூவர் அடங்கிய குழு இந்தியாவின் சிறப்புக்குழுவுக்கு விளக்கங்களை வழங்கியதோடு, தேவை ஏற்படும் வேளைகளில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவை சந்தித்து உரையாடுவதற்கும் அவர்களுக்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.


இவ்வாறு தான் நாங்கள் முன்னெடுத்த படை நடவடிக்கைக்கு புதுடில்லியின் ஆதரவினைப் பெற்றோம் என சிறிலங்காவின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியதாக இச்செய்திக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின் போது படைத்தரப்பினர் போர்க்குற்றங்களையும், மனிதயுரிமை மீறல்களையும் மேற்கொண்டதாக சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் உட்பட மேற்கத்தேய நாடுகளும் சுட்டிக் காட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல்:- இணையம்

## இந்தியாவின் அழுத்தங்களை நாம் பொருட்படுத்தவில்லை



கோத்தபாய ராஜபக்ஷ


மன்மோகன் சிங்

# இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழகத்தின் பிரச்சினையல்ல ; நாட்டின் தேசிய பிரச்சினை

## இதுகுறித்து ஐ.நா.வில் முறையிடுவோம்

## பா.ஜ.க.தேசியத் தலைவர் நிதின் கட்காரி முழக்கம்



(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஐ.நா. சபையில் முறையிடுவோம் என்று பா.ஜ.க.தேசியத் தலைவர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

ஏழை இந்து மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பா.ஜ.க.வின் தமிழ் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தாமரை யாத்திரையின் நிறைவு நாள் நிகழ்ச்சி சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள இராணுவ மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் பா.ஜ.க.வின் தேசியத்தலைவர் நிதின் கட்காரி உரையாற்றுகையில், 2010 ஊழல் ஆண்டாக உள்ளது. 2ஜி ஸ்பெக்ட்ரம், பொதுநலவாய விளையாட்டு, ஆதர்ஷ் ஊழல் ஆகியவற்றில் மட்டும் ரூ2.5 இலட்சம் கோடி அளவுக்கு ஊழல் நடைபெற்றுள்ளது. தென் னிந்தியாவில் குறிப் பாக தமிழகத்தில் தண்ணீர் பற்றாக் குறை உள்ளது. கோடை காலங்களில் மின் பற்றாக்குறை ஏற்பட்டு தினசரி 5 மணிநேரம் மின்சாரம் தடைசெய்யப்படுகிறது. இவற்றை யெல்லாம் கருதித்தான் இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் நதிகள் இணைப்பை வலியுறுத்தினார். ஆனால், ராகுல் காந்தியோ நதிகள் இணைப் புக் கூடாது என்கிறார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தமிழகத்தின் பிரச்சினை மட்டுமல்ல. அது நாட்டின் தேசியப் பிரச்சினை. பா.ஜ.க.வுக்கு 165 எம்.பிக்கள் உள்ளனர். அவர்கள் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஐ.நா. அமைப்பின் மனித உரிமை ஆணையகத் துக்கு பா.ஜ.க. எடுத்துச் சொல்லும்.


இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு மருத்துவ உதவி உள்ளிட்ட உதவிகள் அளிப்பதற்கு பா.ஜ.கவின் மத்திய அமைப்பில் இருந்து ரூ.10 இலட்சம் வழங்கப்படும். அந்த உதவி சேவா பாரதி அமைப்பு மூலம் அவர்களுக்கு செய்யப்படும்.

நாட்டில் இப்போது ஊழலும், பணவீக்கமும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. இப்போதைய விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்திய அரசின் தவறான பொருளாதாரக்கொள்கையே காரணம். ரொட்டித் துண்டுக்காக மக்கள் ஏங்கித் தவிக்கும் நிலை உள்ளது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் ரூ.58 ஆயிரம் கோடி மதிப்பிலான உணவு தானியங்கள் அழுகி வீணாகிப் போகின்றன. இந்தியாவைச் சேர்ந்த 2ஆயிரம் பேர் 22இலட்சம் கோடி அமெரிக்க டொலர் அளவுக்கு வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை இருப்பு வைத்துள்ளனர். அத்தகையோரின் பெயர்களை வெளியிட மத்திய அரசு மறுக்கிறது. அதற்கான காரணம் என்ன?

சிறுபான்மையினரின் ஓட்டுக்களைப் பெறுவதற்காகவே, இந்து ஏழை குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை மறுக்கப்படுகிறது. மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் கட்சிக்கும், தமிழகத்தில் உள்ள தி.மு.க.வுக்கும் மக்கள் நலனில் அக்கறை இல்லை. மத்தியில் பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால், வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் பணம் மீட்கப்படும். அவற்றைக்கொண்டு அப்துல்கலாம் சொன்ன நதி நீர் இணைப்புத் திட்டம் நிறை வேற்றப்படும். அனைத்து மதங்களில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கும் கல்வி உதவுத் தொகை வழங்கப்படும். மத்தியில் பா.ஜ.க. ஆட்சி அமைய வாய்ப்புக் கொடுங்கள் என்று நிதின் கட்காரி தெரிவித்தார்.

பா.ஜ.க. தமிழ் மாநிலத் தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் உரையாற்றுகையில், அனைத்துப் பிரிவுகளைச் சேர்ந்த இந்து ஏழைக்குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கக் கோரி இந்த ஆண்டின் இறுதியில் மிகப் பெரிய போராட்டம் நடத்தப்படும். இந்த ஆட்சியில் விவசாயிகள் ஏமாற்றப்பட்டுள்ளனர். காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்றவற்றில் மக்களின் வாழ்வாதார உரிமைகளை தி.மு.க அரசு விட்டுக்கொடுத்துள்ளது. ஆலயங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. தனித்து நின்றாவது அதன் உறவினர்களை சட்டப் பேரவைக்கு அனுப்பும். தி.மு.க வை வீழ்த்த அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

## ஒன்பது வயதில் கம்ப்யூட்டர் மேதாவியாக திகழும் சிறுமி




இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த வெறும் ஒன்பது வயதான எம். லாவண்யாஸ்ரீ என்ற சிறுமி உலகிலேயே மிகச் சிறிய வயதை உடைய முதல்தர கணினிப் பொறியியலாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் ஒரு பாலமேதையாவார். இவர் சிறுபராயத்தில் இருக்கும் போதே மிகுந்த மதிநுட்பம் உடையவராக இருந்தார்.

இவரின் பிரமிக்கத்தக்க மதி நுட்பத்தைக் கண்டு பெற்றோர் அதிசயித்தனர். லாவண்யாவுக்கு அப்போது ஒன்றரை வயது தான் இருக்கும். இவரின் தாய் ஆங்கில அரிச்சுவடியை கற்பித்துக் கொடுத்திருக்கின்றார். பிஞ்சுக் குழந்தை சொந்தப் பெயருக்கான எழுத்து வரிசையை துல்லியமாகக் அடையாளம் காட்டி இருக்கிறது.

தேசிய இலட்சினைகள், பாடல்கள், வடிவங்கள், பழங்கள்... இப்படி இன்னோரன்ன விடயங்கள் குறித்து சிறுவயதிலேயே கற்கத் தொடங்கி விட்டார்.

லாவண்யாவின் சகோதரி திருக்குறள் படித்து இருக்கின்றார். அப்போது திருக்குறள் கற்கும் ஆவலை லாவண்யா வெளிப்படுத்தி இருக்கின்றார். ஆயிரத்து 330 குறள்களையும் மூன்று வயதில் மனப்பாடம் செய்து விட்டார்.

தற்போது ஒன்பது வயதை அடைந்திருக்கும் லாவண்யா தொழில் தகைமையுடைய மைக்ரோசொப்ட் சான்றிதழைப் பெற்றுள்ளார். இதுவரைமிகச் சிறிய வயதை உடைய முதல் தர கணனிப் பொறியியலாளராக பாகிஸ் தானைச் சேர்ந்த 10 வயதுச் சிறுமி ஒருத்தி தான் இருந்துள்ளார். (ஸ்ரீ-2)




## கச்சதீவு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்யவேண்டும்

### டி.ராஜா வலியுறுத்தல்

(புதுச்சேரி)

இந்திய மீனவர்களின் உரிமையை நிலைநாட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் டி.ராஜா வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சிறுநிதி தொடர்பான 3 நாள் கருத்தரங்கம் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கருத்தரங்கில் பங்கேற்க வந்த கம்யூனிஸ்ட் தேசிய செயலர் டி.ராஜா செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில்,



இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தாக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் உரிமையை நிலைநாட்ட 1974-76 இல் போடப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை மீளாய்வு செய்ய வேண்டும். இந்தியா-நேபாளம் ஒப்பந்தம் கூட மீளாய்வு செய்யப்பட்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல் கச்சதீவு ஒப்பந்தத்தையும் திருத்தி அமைக்க வேண்டும். அப்பகுதியில் மீன் பிடிக்க இந்தியர்களுக்கு உரிமை வழங்க வேண்டும். இந்திய மீனவர்களைக் காப்பாற்ற மத்திய அரசு தவறிவிட்டது. மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த வெளியுறவுத் துறை செயலர் நிருபமா ராவ் சொல்கிறார். மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து இந்திய அரசு இலங்கை அரசுக்கு கடும் எச்சரிக்கை விட வேண்டும்.

தமிழகத்தில் தி.மு.க அரசு இருக்கிறது. புதுச்சேரியில் காங்கிரஸ் அரசு இருக்கிறது. இவை இரண்டும் மத்திய அரசில் அங்கம் வகிக்கிறது. மீனவர்கள் தாக்கப்படுவது குறித்து கடிதம், தந்தி அனுப்பி வருவது போதாது. மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்க மத்திய அரசிடம் கடுமையாக வலியுறுத்த வேண்டும். இதுவரை இவ்வாறு செய்யாமல் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அரசுகள் இருந்து வருவது ஏன் என்று நாடே கேள்வி கேட்கிறது என்றார். (ஸ்ரீ-2)

## மாணவர்களின் கால்களில் கண்காணிப்பு கருவி

## அமெரிக்காவுக்கு இந்தியா கடும் கண்டனம்

(புதுடில்லி)

அமெரிக்க பல்கலைக்கழகத்தில் பயிலும் இந்திய மாணவர்களின் கால்களில் கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்டிருப்பதற்கு அந்தநாட்டு அரசிடம் இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்கு போலி விசா வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் சான்பிரான்சிஸ்கோ நகரில் உள்ள திரி -வேலி பல்கலைக்கழகத்தில் அமெரிக்கப் பொலிஸாரும், குடியேற்றத் துறை அதிகாரிகளும் அண்மையில் சோதனை நடத்தினர். இந்த விவகாரத்தால் பல்கலைக்கழகம் மூடப்பட்டது.

அந்தப் பல்கலைக்கழகத்தில் பயிலும் சுமார் ஆயிரத்து 555 மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது. அவர்களில் 95 சதவீதம் பேர் இந்தியர்கள்.

இந்நிலையில், இந்திய மாணவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் வகையில் அவர்களின் கால்களில் ரேடியோ அதிர்வலைகள் கொண்ட கருவியை அமெரிக்கப் பொலிஸார் பொருத்தியுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சகம், அமெரிக்காவிடம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கத் தூதரகங்கள் மூலமாகவே இந்திய மாணவர்கள் விசா பெற்றுள்ளனர். உரிய விசாரணைக்குப் பின்னரே அவர்கள் திரிவேலி பல்கலைக்கழகத்திலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

போலி விசா விவகாரத்தில் இந்திய மாணவர்கள் பலிக்கடா ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் யாரும் விசா நடைமுறைகளையோ, குடியேற்ற விதிகளையோ மீறவில்லை.


பாதிக்கப்பட்ட மாணவர்களை வேறு பல்கலைக்கழங்களுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தாய்நாட்டுக்கு திரும்ப விரும்பும் மாணவர்களை உடனடியாக இந்தியாவுக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

மனித உரிமைகளுக்கு உட்பட்டே இந்திய மாணவர்களிடம் விசாரணை நடத்த வேண்டும். அவர்களின் கால்களில் பொருத்தப்பட்டுள்ள கருவிகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

சான்பிரான்சிஸ்கோவில் உள்ள இந்தியத் தூதரகம், பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும், அவர்களுக்கு தேவை யான உதவிகள் தூதரகம் மூலமாக வழங்கப்படும் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சகம் உறுதியளித்துள்ளது. (ஸ்ரீ)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

28



கவிப்பேரரசு வைரமுத்து

கொங்கக் கழுத, கருவாக் கழுத, வெள்ளக் கழுத, கறுப்புக் கழுத, சடைக் கழுத, சாம்பக் கழுத, வண்டிக்கழுத, இப்படி எல்லாக் கழுதைகளையும் வெரட்டி வெரட்டிப் பால்பீச்சி முழுக்கொடத் துக்கு முக்காக் கொடம் நெரப்பி, தண்ணித் தொட்டியில ஊத்தித் தங்கச்சிய ஊறவச் சாகளாம். கழுதப் பாலிலயே முழுநாளும் கெடந்தாளாம் முத்துக்கண்ணி, சும்மா வேட்ட நாயக் கண்ட மொச மாதிரி தேமல் போன எடம் தெரியலையாம்.”

“இது நெசமா தாத்தா?” என்று சந்தே கமாய் இழுத்தான் மொச்சை உரித்துக் கொண்டே மொக்கராசு.

கதைசொல்லும் போது இடையில் கேட்கப்படும் கேள்விக்கு ரெண்டு அர்த்தம்;

ஒன்று-கதைசொல்லியை உற்சாகப் படுத்துவது.

இரண்டு-கேட்பவன் தூங்கிவிட வில்லையென்பதை அவ்வப்போது ருசுப் படுத்துவது.

பேரனின் கேள்வியில் பேயத்தேவர் உச்சிகுளுந்து போனார் என்றுதான் சொல்ல வேண்டும்.

“நெசமோ பொய்யோ...? நம்மென் னத்தக்க கண்டோம்...? சொல்லுவாக... சொன்னேன். இப்படி அந்த முத்துக்கண் ணிய ஈ எறும்பு அண்டாம, காத்துக் கறுப்பு அடிக்க விடாம, நாளும் பொழுதும் நல்லா வளத்து வந்த நாளையில விதிவருது அந்த ஊருக்குக் குதிரைமேல ஏறி.”

“அப்படீன்னா?”

தின்ற மொச்சை மொக்கராசின் தொண்டைக்குழியில் நின்று விட்டது.

“கூட்டத்தோடு வேட்டைக்குப் போயி, காட்டுக்குள்ள வழிதப்பிக் கூட்டத்தவிட் டுப் பிரிஞ்சு தொண்டைத் தண்ணிவத்தி நாக்கு வறண்டு குதிரையில வந்து சேந்தான் சமீந்தாரு அந்தூரு ஆத்தங்க ரைக்கு. கடுங்கொண்ட தாகம். உள் அண் ணத்துக்கும் கீழ உசுர் ஒட்டிக்கிருச்சு. ரெண்டு கையிலவும் தண்ணிய அள்ளியள்ளி மாடு மண்டுறமாதிரி மண்டிருக்கான். அப்ப அங்க ஓடுனது நதியில்லடா சாமி விதி...”

“என்னாச்சு?”

“சமீந்தாரு ஒரு வாயித் தண்ணி அள் ளிக் குடிக்க அது தேனா இனிச்சிருக்கு. இன்னொரு வாயித் தண்ணி அள்ளிக் குடிக்க அது பாலா ருசிச்சிருக்கு. மூணாவது வாயி அள்ளிக்குடிக்கத் தண்ணி மல்லிகப்பூவா மணத்தி ருக்கு.”

“தண்ணிக்கேது இத்தன ருசி?”

இதே கேள்விதான் சமீந்தாரு மூளக்குள்ளேயும் பேயப்பிறாண்டிருக்கு. இந்த ஊருத் தண்ணிக்கேதுடா இத்தன குணம்ன்னு ஏறிட்டுப் பாத்திருக்கான். அம் புட்டுத்தேன்! செத்துச் சுண்ணாம்பாயிட்டான் சமீந் தாரு. அங்க, முடிவழியாத் தண்ணி முத்துமுத்தாச் சொட்ட- பட்டுத்துணி பளபளக்க-எல்லா அழகை யும் ஈரம் எடுத்துக் குடுக்க-ஒரு நெலாப்பிஞ்சு ஆத் துல நீராடுறமாதிரி குண்டக்கா மண்டக்கா நீச்சல டிச்சுக் குளிச்சிக்கிட்டிருக்கா முத்துக்கண்ணி. காட் டுக்குள்ளயும் நாட்டுக்குள்ளயும் வேட்டையாடி ‘அதை’யே பொழப்பா வச்சிருக்கிற சமீந்தாரு ஆயு சுக்கும் கண்டதில்ல அப்படி ஒரு அழக. தேனா இனிச்சது வேறறொண்ணுமில்ல... ஆத்துல அவ கொப்புளிச்ச தண்ணி. பாலா இருந்தது வேறொண் ணுமில்லா... அவ ஒடம்பு தடவி ஓடிவந்த தண்ணி. அவ முங்கி முக்குளிச்சாளா இல்லயா- அதுல வந்தது தான் மல்லியப்பூவாசம்.

“பாசம் புடிக்கும் தண்ணி
பலபேரும் குடிக்கும் தண்ணி
சிறுக்கிமக குளிக்கையில
சீனத்தண்ணி ஆச்சுதடி”ன்னு-பாட்டாக்கொட் டுது பாவிப்பயலுக்கு. அவளையெ பாத்து ஆசப் பட்டு நிக்கிறான் சமீந்தாரு. புத்திமாறாட்டம் ஆயிப் போச்சு. ஆசையும் மீசையும் துடிக்க அகத்திக்கீரைக் காரிக்குப் பின்னாலயே போற ஆட்டுக் குட்டி மாதிரி அவ பின்னாலயே போறான் சமீந்தாரு. தண்ணிக் கொடம் சுமந்து ஈரஞ்சொட்ட அவ முன்னால போறா. ஈரம் போன தடத்துவழியே இவன் குதிரை பின் னாலயே போகுது.


வீட்டு வாசல்ல சமீந்தாரு குதிரை நிக்கவும் கையும் ஓடல காலும் ஓடல காயாம்புத் தேவருக்கு. திண்ணையில் மேஞ்ச கோழிய வெரட்டி, சலவைக் குப் போயி வந்த சமுக்காளம் விரிச்சு “அய்யா ஒக் காருங்க... பாலா, மோரா என்ன குடிக்கிறீங்க”ன்னு கேக்க, ‘பாலும் வேணாம்; மோரும் வேணாம்’, ‘பொண்ண அனுப்பு’ங்கிறான் சமீந்தாரு. காயாம்புத் தேவரு கதிகலங்கி நிக்க அண்ணந்தம்பி ஆளுக் கொருபக்கம் அருவாளத்தூக்க அத்தன பேரையும் கையமத்தி “அய்யா நாங்க பொன்ன எழப்போம்; பொருள எழப்போம்; மண்ண எழப்போம்; மானத்த எழக்க மாட்டோம்; போயிட்டுவாங்க’ன்னு புத்தி சொல்லியிருக்காரு காயாம்புத்தேவரு.

சமீந்தாரு வெடச்ச புத்திக்காரன்; படியல “தூக் கிக் குடுக்கிறியா? தூக்கிட்டுப் போகவா”ன்னு கேக் கிறான். ‘தொட்டகைய வெட்டுவே’ங்கிறான் ஒரு அண்ணங்காரன். குதிரையை விட்டு எறங்கிப் பொண் ணத் தூக்குறென்னு புகுந்தான் சமீந்தாரு. அதுல ஒரு அண்ணங்காரன் கெட்டபய. அருவாள எடுத் துக் கம்புக்கூடு மழிக்கிற பய. ‘போட்டான் ஒரு போடு.’ தங்கச்சிய தொடப்போன கையி துண்டா ஓடிப் போயித் தொழுவுல விழுந்திச்சு. வெட்டிவிழுந்த கைய ஒரு வேட்டைநாய் திங்கிறதக் கண்முன்னால பாக்கிறான் சமீந்தாரு. ‘ஒங்க வம்சத்த அழிக்காம விடமாட் டண்டா’ன்னு சத்தியம் பண்ணிட்டு ஓடி ஏறிப் போயிக் குதிரைய ஓட்டறான்.”

“ஒத்தக் கையோடதான...?”

“ஆமா! ஒத்தக்கையோட. காயாம்புத் தேவருக் குத் தெரிஞ்சுபோச்சு கடைசிக் காலம் வந்திருச் சுன்னு. சமீந்தாரு பொல்லாதபய. வெட்டுப்பட்டு வேற வீட்டுக்குப் போறான். சூடுபட்ட புலி சும்மா இருக்காது. வேல்கம்பும் வெட்டாளுமா ஒரு படை வரத்தான் போகுது. குடும்பத்த அழிச்சுப் பொண் ணத் தூக்கிட்டுத்தான் போகப் போறாங்க. நடக் கப்போறது நல்லாவே தெரியுது காயாம்புத் தேவ ருக்கு. அண்ணாந்தம்பிங்க கூடினாங்க. ஆளா ளுக்கு ஒரு யோசனை சொன்னாங்க. தல போனா லும் பரவாயில்ல... தங்கச்சியத் தொடவிடக் கூடாதுன்னு முடிவெடுத்தாங்க. காயம்புத்தேவர் நெனச்சமாதிரியே நடந்துச்சு. சும்மா பொலிகா ளைக மாதிரி புகுந்தானுக சமீந்தாரு ஆளுக. நடுச்சாமத்துல ஊரே தீப்புடிச்சு எரியுது. வைக்கப் படப்புக்கு வச்ச தீயி கூரகூரைக்குத் தவ்வுது; ஆடு மாடுக கத்துது. பொண்டு பொடுசுக அலறுது. அவன் அவன் பொண்டுபுள்ளயக் காப்பாத்துவானா...? காயாம்புத் தேவனுக்குக் கைகுடுப்பானா. அண் ணந்தம்பிக ஆறு பேரு. வந்தவனுக நூறுபேரு. சக்தியுள்ளமட்டும் சண்டை போடுறாங்க. தாக்குப் புடிக்க முடியல. முத்துக்கண்ணியைக் கூட்டிக்கிட்டு அண்ணங்காரன் ஒருத்தன் மட்டும் ஆத்துப்பக்கமாக ஓடறான். மொச எங்க போகுதுன்னு மோப்ப நாய்க் குத் தெரியாதா? சமீந்தாரு ஆளுக வெரட்டுறாங்க. தங்கச்சியோட ஆத்துல போயிக்குதிக்கிறான் அண்ணன். மலையில மழபேஞ்சு நெறதண்ணி போகுது ஆத்துல. முத்துக்கண்ணியோட திரும்பாட்டி எல்லாப் பயலையும் நிக்வைச்சு தலைய வெட்டு வான் சமீந்தாரு. அவன் கையில சாகுற துக்கு ஆத்துல விழுந்து சாகலாம்னு வெரட்டிவந்த பயக வெள்ளத்தில் குதிச்சானுக. அண்ணனும் தங்கச்சியும் தப்பிச்சு நீந்துறாக. ஆத்துத்தண்ணி இழுக்குது. எதுத்து நீச்சலிக்க முடியல. என்ன பண்ணுவா முத்துக்கண்ணி பாவம்! எலும்பு முத் தாத எளம்புள்ள.

தண்ணி கூடிக்கிட்டே போகுது. வெரட்டி வந் தவங்களும் நெருக்கி நீச்சலடிச்சு வர்றாங்க. நட் டாத்துல உசுருக்குப் போராடி மூக்குவழியாத் தண்ணி குடிச்சுத் தத்தளிக்கிற தங்கச்சிகிட்ட அண் ணஞ்சொல்றான். ‘தாயி! ஒன்னக் கரசேக்கவும் முடி யாது. கரசேத்தாலும் ஒங் கற்பக் காப்பாத்தவும் முடி யாது. அதனால அண்ந்தம்பிங்க சொல்லிவிட்டபடி ஒன்ன ஆத்துத் தண்ணியிலேயே அமுக்கிக் கொல் லப் போறேன்; என்ன மன்னிச்சிரு தாயி’ன்னு அழுதுகிட்டே சொல்லிட்டு அவ ஆறுபாகம் கூந் தல அப்படியே தூக்கிப்புடிச்சு அமுக்குனானாம் தண்ணிக்குள்ள. அப்பேங்கிறா... ஆத்தேங்கிறா... அண்ணே கொல்லாதேங்கிறா... இது ஆண்டவ னுக்கே அடுக்காதுங்கறா... அவன் கேக்கல. வெள்ளிக்குத்துவெளக்க வெள்ளத்துல எறிஞ் சமாதிரி அழகுப்பிள்ளையக் கொன்னு ஆத்தோட விட்டானாம் பாவி. கொல்றதையும் கொன்னுபுட்டு நாங்க தோள்லயும் மார்புலயும் தூக்கி வளத்த தெய்வச்செல ஆத்தோட போயிருச்சேன்னு பொலம்புறான் பாவி. (வளரும்)



# தீபம் ஏற்றுவதால் கிடைக்கும் பலன்கள்

◆ நெய் தீபம் ஏற்றினால் வீட்டில் செல்வம் பெருகும். கடன்கள் மறையும்.

◆ நல்ல நெய்யில் தீபம் ஏற்றினால் எம பயம் விலகும். சுகம் உண்டாகும்.

◆ இலுப்பை எண்ணெயில் தீபம் ஏற்றுவது உடல் ஆரோக்கியத்தை தரும். வியாதிகள் விலகும்.

◆ ஆமணக்கு எண்ணெயில் தீபமேற்றினால் மன சாந்தி உண்டாகும்.

◆ விளக்கெண்ணெயில் தீபமேற்றினால் உறவுகள் பலப்படும். புகழ் உண்டாகும்.

◆ மகாலட்சுமிக்கு பசு நெய்யும், ருத்ராதி தேவதைகளுக்கு இலுப்பை எண்ணெயும், துஷ்ட சக்திகள் விலக ஐந்து எண்ணெய் கூட்டிய தீபமும் ஏற்றினால் நல்லது.

◆ கடலை எண்ணெயில் தீபம் ஏற்றுவதும், செயற்கையாக வண்ணம் ஏற்றிய எண்ணெயில் தீபம் ஏற்றுவதும், சூடுவைத்த எண்ணெயில் தீபம் ஏற்றுவதும், தரையில் கொட்டிய எண்ணெயைக் கொண்டு தீபம் ஏற்றுவதும், அசுத்த பாத்திரத்தில் வைத்த எண்ணெயினால் தீபம் ஏற்றுவதும் தவிர்க்க வேண்டியவை. இவை துன்பத்தையே தரும்.

## மகாலட்சுமி அருள் கிடைக்க செய்யும் தாமரைத்தண்டு திரி



◆ தாமரைத் தண்டு திரிநூலால் விளக்கேற்றுவது செல்வ செழிப்பை உண்டாக்கும். மகாலட்சுமி அருளைக் கொண்டு வந்து சேர்க்கும்.

◆ வாழைத்தண்டு நூலால் விளக்கேற்றுவது குடும்ப விருத்தியைக் கொடுக்கும். பிரிந்து சென்ற உறவுகள் தேடிவரும்.

◆ வெள்ளெருக்கு திரியால் விளக்கேற்றுவது தேவதாசியம் உண்டு பண்ணும். செய்வினைகளை போக்கும்.

## தீபம் ஏற்றும் திசைகள்

◆ கிழக்கு திசை நோக்கி தீபம் ஏற்றுவதால் தேடி வந்த துன்பங்கள் ஓடிப்போகும்.

◆ மேற்கு திசை நோக்கி தீபம் ஏற்றுவதால் தேவையற்ற கடன்கள் மறையும். கிரகசாந்தி உண்டாகும்.

◆ வடக்கு திசை நோக்கி தீபம் ஏற்றுவதால் குபேர செல்வம் உண்டாகும். சுபகாரியங்கள் வீட்டில் நடைபெறும்.

◆ தெற்கு திசையில் தீபம் ஏற்றுவது கூடாது. அது பித்ருக்களுக்கு உகந்த திசையாகும்.

## தீபத்தை வாயால் ஊதி அணைக்கலாமா?


◆ தீபத்தை வாயினால் ஊதி அணைக்கக் கூடாது.

◆ ஐயப்ப வழிபாடு செய்பவர்கள் மகரஜோதி அன்று தெரியும் ஜோதியை ஐயப்பனாக வழிபடுகின்றனர்.

◆ தீபாவளி அன்று வட இந்தியர்கள் தீப வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தருகின்றனர்.

◆ பாம்புக்கு பயந்து, கோவில் கருவறையினுள் சென்ற ஒரு எலியானது, அங்கு அணையும் நிலையில் இருந்த விளக்கு மேல் ஏறி திரியை லேசாக அசைத்துவிட, இந்தத் தீபம் பிரகாசமாக எரிந்தது. இதனால் சுவாமிக்கு விளக்கு போட்ட புண்ணியம் கிடைத்தது. அந்த எலியானது மறுபிறப்பில் சக்கரவர்த்தியாக பிறந்தது என்று சொல்வார்கள்.

◆ தீப வழிபாடு பாவ விமோசனத்தையும் தரும்.



யா/ கோப்பாய் மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பிரதம கணக்காளர் ஆறுமுகம் கிரிதரன், வித்தியாலய அதிபர் ச.திரவியராசா, வித்தியாலய பிரதி அதிபர் திருமதி அனுசியா சற்குணராசா ஆகியோர் நிற்பதையும் பிரதம விருந்தினர் மாணவத் தலைவன் செல்வன் ப.சீராளனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

# சமூக விரோத செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## யாழ்.கட்டளைத் தளபதி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இரவு பகலாக எமது இராணுவத்தினர் வீதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகின்றனர்.

இரவு வேளைகளில் வீதிச்சோதனையில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கான உதவிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்த சூழ்நிலையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரம் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் அண்மைக் காலங்களாக இடம்பெற்றுவரும் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கட்டளையிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசாங்கம் பல உதவிகளை வழங்கி வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே நேற்று முன்தினம் இந்த உதவிகள் அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், இந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணப் பொதி வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர துவிச்சக்கரவண்டிகள், சண்ரெல் தொலைபேசி, தென்னங்கன்றுகள் போன்ற பல உதவிகள் 523 ஆவது படைப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளன.

மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே நாம் செயற்பட்டு வருகின்றோம். இது ஒரு புறமிருக்க, யாழ்.குடாநாட்டில் இரவு பகலாக எமது இராணுவத்தினர் வீதிகளில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இதேவேளையில் மக்களுக்கு ஏற்படும் குற்றச்செயல்கள் தொடர்பான தகவல்களை தயங்காது எமக்குத் தெரிவிக்கவேண்டும். உங்களின் பாதுகாப்புக்கு இராணுவத்தினர் உதவுவார்கள்.

வடக்கு,கிழக்கு ஆகிய இடங்களில் இடம்பெற்ற இரத்தம் சிந்திய யுத்தம் நிறைவு பெற்று தற்போது அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார். (ச-6)


# விலங்குவிசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. இதற்கமைய நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை அதிப்பத்தி வளன் புரத்திலும் காலை 11.30 மணி தொடக்கம் மதியம் 1.30 மணிவரை கொழும்புத்துறை வீதி வளன்புரத்திலும் வைத்து இத்தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இனங்களுக்கிடையில் பரஸ்பர கருணை காட்டப்பட வேண்டும்

## பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)


சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 13 ஆவது பரிசளிப்பு விழா, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், பிரதமர் டி. எம். ஜயரட்ன தலைமையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்றது.


இதன்போது, உரையாற்றிய பிரதமர், அனைத்து இனத்தவர்களுக்கும் கருணை காட்டுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். சர்வதேச ரீதியாக ஏராளமான மதங்கள், இனங்கள் இருக்கின்றன. இதன் காரணமா கவே பிரிவினைவாதம் தோற்றம் பெற்றுள் ளதாகக் குறிப்பிட்டார்.

அதேபோன்று மனிதாபிமானம் குறைவடைந்து சென்றுள்ளதாகவும் பிரதமர் டி.எம். ஜயரட்ன சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, மனிதர்கள் மத்தியில் இருக்கின்ற மனிதாபிமானமற்றவர்கள் குறித்து கருத்து வெளியிட்ட பிரதமர், தனக்காக மட்டும் வாழ்கின்றவர்கள் ஒருபோதும் நிம்மதியான வாழ்க்கையை எதிர்பார்க்க முடியாது எனத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டை தவிர்ந்த வெளிநாடுகளில் எங்கேனும் ஒரு இனத்திற்கு எதிராகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதனை குரோதமாகக் கொண்டு உள்நாட்டில் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)





யாழ். மாரீசன் கூடல் றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட காங்கேசன்துறை இலங்கை வங்கி முகாமையாளர் தில்லைநாதன் செந்திநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இளவாலை புனித வளனார் விடுதிச்சாலை நிர்வாகி அருட்சகோதரர் ஆர்.வி.ஏ.மில்ரோய், கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட இளவாலை பங்குத்தந்தை அருட்திரு ஏ.சி.கிறிஸ்தோபர் அடிகளார், பாடசாலை அதிபர் சூ. நோபேட் உதயகுமார் ஆகியோர் நிற்பதையும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களோடு மாணவர்கள் நிற்பதையும் அருகில் அதிபர்,ஆசிரியர்,விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# போரில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தியதை வெளிப்படுத்தியமையாலேயே பிரகீத் கடத்தப்பட்டார்

## அவரது மனைவி தெரிவிப்பு

பேரழிவை ஏற்படுத்தக் கூடிய இரசாயன ஆயுதங்களை அரசு தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தியதை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தமையாலேயே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட பிரதானமாக கடத்தப்பட்டுள்ளார் என்று அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

வட மாகாண தமிழர்களுக்கு எதிராக அரசினால் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமை குறித்து எக்னெலிகொட புலனாய்வு நடத்தினார் என்றும் கண்டுபிடித்த உண்மைகளை பத்திரிகையில் பிரசுரித்து வந்தார் என்றும் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கு இந்த இரசாயன ஆயுதங்களின் பாவனை குறித்து வெளிப்படுத்தினார் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு எதிராக அரசு இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியுள்ளது என கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளுக்கு எக்னெலிகொட எழுத்துமூலம் கடந்த 2008 ஆம் ஆண்டு தெரிவித்தார் என்றும் குறிப்பிட்டார். எக்னெலிகொட கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவை பெரிதும் ஆதரித்தமையாலும் கணவர் கடத்தப்பட்டிருக்கின்றார் என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கப்படமாட்டாது

## குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவ சேவையிலிருந்து தப்பியோடியவர்களுக்கு இனி கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படமாட்டாது என்று குடியகல்வு மற்றும் குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய தீர்மானப்படி இராணுவ சேவைகளிலிருந்து தப்பியோடியவர்கள் மற்றும் வங்கிக் கடன்களைச் செலுத்தாதவர்களுக்கு எதிர்வரும் காலங்களில் இவர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான கடவுச்சீட்டுகள் வழங்கப்படமாட்டாது என்று தெரிய வருகின்றது.

அவ்வாறானவர்களின் பெயர் விபரங்கள் சேகரிக்கப்பட்டு தற்போதைக்கு கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் குடியகல்வுத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் அரசாங்கத்துக்கு எதிரானவர்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பான.சாட்சியங்களை வைத்திருக்கும் இராணுவத்தினர் ஆகியோர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறானதோர் கட்டுப்பாட்டை அறிமுகப்படுத்தியுள்ளதாக அரசாங்கத்தின் முக்கிய அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# வெள்ளப் பாதிப்பால் 5 இலட்சம் மக்களுக்கு உணவுப்பற்றாக்குறை

## உலக உணவுத்திட்டம் மதிப்பீடு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 5இலட்சம் மக்கள் பெரும் உணவுப் பொருள் பற்றாக்குறையை எதிர்நோக்கியிருப்பதாக உலக உணவுத் திட்டம் மதிப்பிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான இணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெள்ளம் காரணமாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஆயிரத்து 341 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசாங்கம் இதுவரை குறிப்பிடத்தக்க நிரந்தர வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தவில்லை எனவும் இணைப்பு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தினால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் இந்த மாவட்டங்களில் 101, 171 ஹெக்டேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த நெற் பயிர்கள் அழிவடைந்துள்ளன. (ஸ்ரீ-2)

# 2011.01 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1606 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ஜேம்சிற்கு எதிராகவும் நாடாளு மன்றத்திற்கெதிராகவும் சதி முயற்சியில் இறங்கியமைக்காக காய் ஃபோக்ஸ் என்பவன் தூக்கிலிடப்பட்டான்.

★ 1747 - பால்வினை நோய்களுக்கான முதலாவது மருத்துவ நிலையம் லண்டனில் லொக் மருத்துவமனையில் நிறுவப்பட்டது.

★ 1876 - அனைத்து இந்தியப் பழங்குடிகளும் அவர்களுக்கென அமைக்கப்பட்ட சிறப்பு இடங்களுக்கு செல்லுமாறு ஐக்கிய அமெரிக்க அரசு உத்தரவிட்டது.

★ 1915 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி, ரஷ்யாவுக்கெதிராக நச்சு வாயுவைப் பயன்படுத்தியது.

★ 1928 - லியோன் ட்ரொட்ஸ்கி கசகஸ்தானுக்கு நாடுகடத்தப்பட்டார்.

★ 1937 - சோவியத் ஒன்றியத்தில் 31 த்ரொட்ஸ்கி ஆதரவாளர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

★ 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் ஜப்பான் வசமிருந்த மார்ஷல் தீவுகளில் தரையிறங்கினார்கள்.

★ 1946 - யூகொஸ்லாவியாவில் சோவியத் முறையிலான அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டு நாடு பொசுனியா எர்செகோவினா, குரொவேஷியா, மக்கெடோனியா, மொண்டெனேகுரோ, சேர்பியா மற்றும் சிலவேனியா என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

★ 1953 - வட கடல் பெருக்கெடுத்ததன் விளைவாக நெதர்லாந்தில் ஆயிரம் 800 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1958 - ஐக்கிய அமெரிக்காவின் வெற்றிகரமான முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1961 - நாசாவின் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 2 விண்கலம் ஹாம் என்ற சிம்பன்சி ஒன்றை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

★ 1968 - வியட்நாம் போர்: வியட் கொங் படைகள் சாய்கொன் நகரில் அமெரிக்க தூதராலயத்தைத் தாக்கினர்.

★ 1968 - நவூறு (Nauru) அவுஸ்திரேலியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1980 - கௌதமாலாவில் ஸ்பெயின் தூதராலய முற்றுகையில் 39 பேர் உயிருடன் தீயிட்டுக் கொல்லப்பட்டனர்.

★ 1990 - சோவியத் ஒன்றியத்தில் முதலாவது மாக்டொனால்ட் உணவகம் மொஸ்கோவில் திறக்கப்பட்டது.

★ 2003 - அவுஸ்திரேலியா, நியூசவுத் வேல்ஸ் மாநிலத்தில் வோட்டர்ஃ போல் என்ற இடத்தில் புகையிரதம் ஒன்று தடம்புரண்டதில் சாரதி உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★ 1762 - லக்லான் மக்குவாரி, காலனித்துவ நிர்வாகி (இ.1824)

★ 1797 - பிராண்ஸ் சூபேர்ட், ஆஸ்திரிய இசையமைப்பாளர் (இ.1828)

★ 1881 - ஏர்விங் லாங்முயர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1957)

★ 1902 - ஆல்வா மீர்டல், நோபல் பரிசு பெற்றவர் (இ.1986)

★ 1929 - ருடொல்ஃப் மொஸ்பாவர், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனியர்.

★ 1935 - கென்சாபுரோ ஓயீ, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய எழுத்தாளர்

### இறப்புகள்

★ 1580 - கர்தினால் ஹென்றி, போர்த்துக்கல், இலங்கை மன்னன் (பி.1512)

★ 1933 - ஜோன் கல்ஸ்வோதி, நோபல் பரிசு பெற்ற ஆங்கில எழுத்தாளர் (பி.1867)

★ 1955 - ஜோன் மொட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1865)

★ 1973 - ராக்னர் ஆண்டன் ஃபிரீஷ், நோபல் பரிசு பெற்றவர் (பி.1895)

★ 1987 - எம். பக்தவத்சலம், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (பி.1897)

★ 2009 - நாகேஷ், நகைச்சுவை நடிகர். (பி.1933)

**1996 - கொழும்பு மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 86 பேர் கொல்லப்பட்டு ஆயிரத்து 400 பேர் வரை படுகாயமடைந்தனர்.**



# சுய நலம் வேண்டும்!

உங்களுக்கு ஆசை இல்லை என்றால், இந்தக் கட்டுரையின் அடுத்த வரிக்குப் பார்வையை எடுத்துப் போக முடியாது. அவ்வளவு ஏன்... நிற்க முடியாது.நடக்க முடியாது. சாப்பிட முடியாது.

'ஆசையினால் சாப்பிடுகிறேன் என்று யார் சொன்னது? பசிக்காகத் தான் சாப்பிடுகிறேன்' என்று நீங்கள் விதண்டாவாதம் செய்யலாம்.

நல்ல பசியான நேரத்தில் உறவினர் வீட்டுக்குப் போயிருக்கிறீர்கள். இலை போட்டு ருசிமிக்க சாப்பாட்டைப் பரிமாறிகிறார்கள். நீங்கள் முதற் கவளத்தை வாயருகில் கொண்டு போகும்போது, உங்களை அசிங்கமாக என்னென்னவோ ஏசுகிறார்கள். அடுத்த கவளம் உள்ளே இறங்குமா? பசி தீரவில்லை ஆனால் சாப்பிடவும் முடியவில்லை. ஏன்? சாப்பாடும் ஆசை போய்விட்டது. ஆசையினால் செய்யாமல் அவசியத்திற்காக எதைச் செய்லாலும், அது முழுமையான சந்



தோசத்தைக் கொண்டுவராது.

உங்கள் அடிப்படை இயல்பே மகிழ்ச்சியாக இருப்பதுதான். நீங்களாக வரவழைத்துக் கொண்ட துன்பங்களால் தான், அது காணாமற் போகிறது.

சந்தோசமாக இருக்க வேண்டுமானால், முதலில் நீங்கள் சுயநலத்தோடு இருக்க வேண்டும். சுயநலத்தில்கூடக் கஞ்சத்தனம் வேண்டாம். முழு சுயநலவாதியாக இருங்கள்.

ஒருமுறை சங்கரன் பிள்ளையின் மகனுக்குக் கடுமையான காய்ச்சல். டாக்டர் வந்தார். 'இது தொற்றுநோய்க் கிருமியால் வந்திருக்கும் காய்ச்சல். ஏற்கெனவே, இதை எவ்வளவு பேருக்கு உங்கள் மகன் பரப்பிவிட்டானோ? இனி, உடம்பு சரியாகும் வரை பள்ளிக்குப் போக வேண்டாம்' என்று எச்சரித்தார். சிகிச்சை சில நாட்களுக்குத் தொடர் ந்தது. மகனுக்கு ஒருவழியாகக் காய்ச் சல் குறைந்தது, குணமாகி விட்டான்.

டாக்டர் 'பில்லை' நீட்டினார்.

தொகையைப் பார்த்துச் சங்கரன் பிள்ளை சண்டைக்குப் போய்விட்டார்.

டாக்டர் விளக்கம் கொடுத்தார். "ஒன்பது முறை, உங்கள் வீட்டுக்கு வந்து ஊசி போட்டிருக்கிறேன். அதுவும் விலையுயர்ந்த மருந்து!"

சங்கரன் பிள்ளை கொதித்தார்.

"விளையாடுகிறீர்களா? என் மகன் ஊரெல்லாம் காய்ச்சலைப் பரப்பிய தால் தானே உங்கள் பிஸ்னஸ் படுஜோராகப் போய்க் கொண்டிருக்கிறது. என்னிடம் எப்படிப் பணம் கேட்பீர்கள்? நியாயமாக நீங்களல்லவா எனக்குப் பணம் தர வேண்டும்?"

இப்படித்தான் எது கிடைத்தாலும், அதனால் ஆதாயம் உண்டா, அதை வைத்துக்கொண்டு எப்படியாவது உலகத்துப் பணத்தையெல்லாம் சுருட்டித் தன் பொக்கெட்டில் போட்டுக் கொள்ள முடியுமா என்று பேராசை கொண்டு பலர் அலைகிறார்கள்.

அப்பேர்ப்பட்ட சுயநலத்தை நான் சொல்லவில்லை. நான் சொல்லும் சுயநலம் இன்னும் பெரிது.

இந்தச் சட்டை என்னுடையது, இந்த வீடு என்னுடையது என்ற குறுகிய சுயநலத்தை விடுங்கள். இந்த ஊர் என்னுடையது, இந்த நாடு என்னுடையது, இந்த உலகமே என்னுடையது என்று எல்லாவற்றையும் உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் டெய்லராக இருங்கள். ஓட்டோ ஓட்டுபவராக இருங்கள். ஆப்ரேசன் செய்யும் டாக்டராக இருங்கள், காய்கறி விற்பவராக இருங்கள். கொம்பியூட்டர் தயாரிப்பவராக இருங்கள்.

இந்த உலகமே உங்களுடையதென்று மனதார ஏற்றுக்கொண்டுவிட்டால், அதில் உள்ளவர்கள் உங்களைச் சேர்ந்தவர்களாகிவிடுவார்கள். அதன்பின், அவர்களுக்காக நீங்கள் எதைச் செய்தாலும் எப்படிச் செய்வீர்கள்? உங்களுக்கே செய்துகொள்வதாக நினைத்து, மிகுந்த ஈடுபாட்டுடன், முழு அர்ப்பணிப்புடன் செய்வீர்களல்லவா? அப்படி அன்போடு, ஆசையோடு செய்யும்போது அதன் தரம் எப்படி இருக்கும்? உச்சத்தில் இருக்கும். அப்புறம் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பலனை நீங்கள் வேண்டாம் என்று மறுத்தாலும் அது தானாக வந்து உங்கள் காலடியில் கொட்டும். உண்டா, இல்லையா?

எப்போதுமே நூறு சதவீத ஈடுபாட்டுடன், சந்தோசத்துடன் செயலாற்றுங்கள். பலன்தான் சந்தோசம் என்று நினைக்காமல், செய்வதையே பிரியத்துடன் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். முதல் முறை வெற்றி கிடைக்கவில்லையானால், உங்களுக்குப் பிரியமானதைச் செய்ய இன்னொரு வாய்ப்புக் கிடைத்ததாக நினைத்துக் கொள்ளுங்கள்.

மறுபடியும் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். ஒவ்வொரு முறையும் சந்தோசம்தான் கிடைக்கும். வலி தெரியாது. வேதனை இருக்காது.

யோசியுங்கள்... உங்கள் திறமை முழுவீச்சில் எப்போது வெளிப்படுகிறது? நீங்கள் சந்தோசமாக இருக்கும் போதா? படபடப்பிலும், துக்கத்திலும் இருக்கும் போதா? ஆசையோடு, சந்தோசமாக ஒரு வேலையைச் செய்யும்போது, வெற்றி கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பே இல்லை.

நீங்கள் மட்டும் சந்தோசமாக இருந்தால் போதாது. நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் மற்றவர்களுக்கும் சந்தோசம் இருக்கவேண்டும். சுற்றி இருப்பவர்கள் உங்களைச் சந்தோசத்தோடு ஏற்கவேண்டும்.

காட்டில் ஒரு சிங்கம் கால்களை வீசி வீசிக் கர்வத்தோடு நடந்தது. அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்த முயற்குட்டியைச் சட்டென்று பிடித்தது.

"ஏய், இந்தக் காட்டில் யார் ராஜா?" என்று கேட்டது. முயற்குட்டி பற்களெல்லாம் கிடுகிடுக்க, "சந்தேகமென்ன? நீங்கள்தான்!" என்றது.

சிங்கம் முயலை விட்டுவிட்டு, அடுத்ததாக ஒரு நரியைத் தாவிப் பிடித்தது. அதே கேள்வியைக் கேட்டது.

நரி நடுக்கத்துடன், "தலைவா... உனக்கேன் இந்தச் சந்தேகம்" உன்னைத் தவிர, வேறு யார் இங்கே ராஜாவாக இருக்க முடியும்?" என்றது.

அப்புறம் வழியில் எதிர்ப்பட்ட மிருகங்கள் எல்லாம் பணிவாக மண்டியிட்டுச் சிங்கத்திடம், "நீங்கள்தான் ராஜா" என்று அச்சத்தில் அலறின. சிங்கத்துக்குப் பெருமை பிடிபடவில்லை. இன்னும் கொஞ்சம் தூரம் போனது.



ஆன்மீகம் 04

அங்கே ஒரு யானை, சிங்கத்தைப் பொருட்படுத்தாமல் அதுபாட்டுக்கு மரத்திலிருது இலைகளைப் பறித்துக் கொண்டிருந்தது.

சிங்கம் அதன் எதிரில் போய் நின்று, "ஏய் முட்டாளே, யார் இந்தக் காட்டுக்கு ராஜா?" என்று கர்ஜித்தது.

யானை திரும்பியது. தும்பிக்கையால் சிங்கத்தைச் சுருட்டித் தூக்கியது. ஓங்கித் தரையில் அடித்தது.

சிங்கத்தின் முதுகெலும்பே முறிந்து போயிற்று. "ஏம்பா, இப்ப நான் என்னப்பா கேட்டுப்புட்டேன்? வாய் வார்த்தையாகச் சொல்லப்படாதா?" என்று வலியில் முனகியபடி கேட்டது சிங்கம்.

"இனிமேல் இந்த விஷயத்தில் உனக்குக் குழப்பமே வரக்கூடாது, பார்!" என்றது, யானை.

சுற்றியிருப்பவர்கள் உங்களை மகிழ்ச்சியுடன் ஏற்காவிட்டால், சிங்கத்திற்குக் கிடைத்த அனுபவம் தான் உங்களுக்கும் கிடைக்கும்.

இப்படி வேறு யாராவது உங்களுக் உகுக் கற்பிப்பதற்கு முன் உங்கள் வாழ்க்கையை நீங்களே இனிதாக அமைத்துக் கொள்ளக் கற்றுக்கொள்ளுங்கள்.

எதைச் செய்தாலும் முழு ஆசையோடு செய்யுங்கள்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# ஆத்திசூடி: ஔவையார் - பாரதி - முருகையன்
# ஒரு கருத்தியல் ரீதியான ஒப்பாய்வு 03

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக்கட்டுரை"**

பாரதியின் அறிவுத்தேடல் தொடர்பான கருத்துக்களில் அறிவின் உச்சத்திற்குச் செல்லுதல், சந்தேகத்தைத் தவிர்த்தல், வரலாற்றுப் பயிற்சிபெறுதல், ஊகத்தைத் தவிர்த்தல் போன்ற பல புதுமையான கருத்துக்களைக் காணலாம்.

*"கற்றது ஒழுகு*
*சோதிடந்தனை இகழ்*
*நீதிநூல் பயில்*
*நுனியளவு செல்*
*நூலினைப் பகுத்துணர்*
*நெற்றி சுருக்கிடேல்*
*லோகநூல் கற்றுணர்*
*மீளுமாறு உணர்ந்துகொள்*
*சரித்திரத் தேர்ச்சிகொள்"*

என்று வரும் சிந்தனைகளில் மீண்டுவரும் அறிவின் உணர்வு தொடர்பாக சிந்திக்கின்றார் பாரதி.

ஈழத்துக் கவிஞர் முருகையன் கல்வி தொடர்பாகக் கூறும் கருத்துக்களில் நுட்பவியல், விஞ்ஞானம் என்பவற்றை முதன்மையாகப் பேசுகிறார்.

*"அறிவினை விரிவு செய்*
*ஆற்றல் பெருக்கு*
*கேட்டறிந் தொழுகு*
*நுட்பவியல் பயில்*
*நூல்களை ஆராய்*
*போதனை புகுந்து காண்*
*விஞ்ஞானம் பயில்"*

என்று முருகையன் பேசுவதைக் காணலாம். வள்ளுவன் கூறும் "நுண்மாண் நுழை புலத்துடன் போதனை புகுந்து காண்" என்ற வரியினை ஒருங்கே வைத்தே நோக்கலாம்.

**ஆத்திசூடியில் உலகியல்**

உலகியல் வாழ்விற்கும் மறுமை வாழ்விற்கும் இடையிலான சரியான இடைவெளியைப் பழந்தமிழ் அறநூல்கள் வரையறுக் கின்றன. உலகியல் வாழ்வின் உயர்நெறிகள் தான் மறுமை வாழ்வின் உன்னதத்திற்கு அடிப்படை என்பதைஅவைவிளக்கியிருந்தன. ஔவையின் ஆத்திசூடியில் நோயற்ற வாழ்வு, உறவுகளுடன் வாழ்தல், பொருளின் அவசியம், உணவின் தேவை, தகுதிக்கேற்ற வீடு, இணங்கி வாழ்தல் என்பன தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவரின் உலகியல் தொடர்பான எண்ணக் கருத்துக்களைத் தாங்கி,

*"இணக்க மறிந் திணங்கு*
*இடம் பட வீடெடேல்*
*கிழமைப் பட வாழ்*
*நோய்க்கு இடங் கொடேல்*
*பொருள் தனைப் போற்றி வாழ்*
*மீதூண் விரும்பேல்*
*ஊருடன் கூடி வாழ்"*

என்ற வரிகள் வந்து வீழ்ந்துள்ளன.

பாரதியாரின் உலகியல் தரிசனம் வித்தியாசமானது. ஒருவனது உலக வாழ்விற்கு உறுதியாக அவர் கருதுவது பணம், கவிநாட்டம், இளமை, சௌரியம் என்பவற்றையே ஆகும். பாரதியின் லௌகீகம் எப்படி அவரின் "காணி நிலம் வேண்டும்..." என்ற பாடலில் வெளிப்படுகின்றதோ அவ்வாறுதான் புதிய ஆத்திசூடியிலும் வெளிப்பட்டுள்ளது.

*"திருவினை வென்று வாழ்*
*பணத்தினைப் பெருக்கு*
*பாட்டினில் அன்பு செய்*
*மூப்பினுக்கு இடங் கொடேல்*
*யௌவனங் காத்தல் செய்*
*லீலை இவ்வுலகு*
*சௌரியம் தவறேல்*
*உடலினை உறுதி செய்*
*ஔடதம் குறை"*

என்று வரும் சிந்தனைகள் உலக வாழ்வில் இன்றும் சவாலாக உள்ள பல விடயங்கள் தொடர்பாகச் சிந்திக்க வைக்கின்றன.

முருகையன் தனது "எழுபத்தாறு" என்பதில் இந்த உலகந்தான் உயர்ந்த மோட்சம் என்று வரையறுத்துள்ளார். தத்துவ விசாரங்கள் முருகையனிடத்தில் அதிகம். உலகம் தொடர்பான கருத்துக்களில் ஒரு பூ மொட்டினை மோந்து பார்ப்பதே பெரியதொரு வாழ்வாகி விடுவதைக் காணலாம்.

*"நல்ல திவ்வுலகம்*
*புவி மிக இனிது*
*பூஞ்செடி பேணு*
*மொட்டுக்கள் மோந்து பார்*
*மோட்சம் இவ்வையகம்"* என்று முருகையன் உலகத்தை இனிதாகக் காண்கின்றார்.

**ஆத்திசூடியில் ஆன்மீகம்**



உலகியலை மாத்திரமன்றிச் சமய வாழ்வு, ஆசாரங்கள், ஆன்மீகம் என்பன தொடர்பிலும் "ஆத்திசூடி" பாடிய இம் மூவரது சிந்தனைப் போக்குகள் வெளிப்பட்டுள்ளன. ஔவையாரின் இறையியல் தரிசனம் நாம் எல்லோரும் அறிந்ததே. இவர், "தெய்வ மிகழேல்" என்று கூறும் ஒரு வரியில் இவரின் சிந்தனை வெளிப்பாட்டை உணரலாம்.

**இ.இராஜேஸ்கண்ணன்**
விரிவுரையாளர், சமூகவியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

பாரதியாரின் தரிசனத்தின் வீச்சு வேறுபட்டது. புலனடக்கம், தன்னை உணர்தல், இயற்கையைப் போற்றுதல், தியானம் செய்தல், அருளின் நெகிழ்ச்சி என்பன பற்றிப் பாரதி சிந்தித்தார். மனிதனுள் உள்ளுறையும் ஆற்றல்வழி இறைவனை உணருதல் அல்லது ஆன்மீகம் உயர்வடைதலை வலியுறுத்தும் மெய்ஞ்ஞானம் பாரதியினுடையது.

(தொடரும்)

# மக்களின் எதிர்ப்பு வலுத்துவரும் நிலையில்

# அமைச்சரவையைக் கலைத்தார் எகிப்து ஜனாதிபதி

(கெய்ரோ)

எகிப்தில் அரசுக்கு எதிராக நடந்த போராட்டங்களால் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் (82)நேற்று முன்தினம் தன் அமைச்சரவையைக் கலைத்தார். அதேநேரத்தில் பதவி



விலக மறுத்துவிட்டார்.

எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பதவி விலகக்கோரி கடந்த நான்கு நாட்களாக அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான முஸ்லிம் சகோதரத்துவ கட்சியும் ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி முகாமையின் முன்னாள் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான முகமது எல்பரேடியும் களத்தில் குதித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மதியத் தொழுகைக்குப் பின் நடந்த போராட்டங்களின் போது பல நகரங்களில் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் நிகழ்ந்தது. ஜனாதிபதியின் தேசிய ஜனநாயகக் கட்சி அலுவலகமும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

கடந்த நான்கு நாட்களாக நடந்த கலவரத்தில் இதுவரை 26 பேர் பலியாகியுள்ளனர். 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். கலவரத்தை அடக்க இராணுவ வீரர்கள் பீரங்கிகளுடன் களமிறங்கியுள்ளனர். நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமுலாகியுள்ளது. அதையும் மீறி இலட்சக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். அரச தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் வெளியுறவு அமைச்சகம் முற்றுகையிடப்பட்டன. இராணுவ வாகனங்கள், பொதுச் சொத்துக்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன.

இதன் பின் இரவில் அரச தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி முபாரக், தற்போதைய அரசு முழுமையாகக் கலைக்கப்படுகிறது. விரைவில் புதிய அரசு அமைக்கப்படும். நாடு தொடர்ந்து ஜனநாயக வழியிலேயே செல்லும். மாற்றங்கள் பேச்சுவார்த்தையால் அன்றி வன்முறையால் சாத்தியமல்ல. வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் குறைபாடு ஆகிய பிரச்சினைகளை நான் உணர்ந்திருக்கிறேன். விரைவில் அவை தீர்க்கப்படும். நாடு வன்முறையில் சிக்கி சீரழிவதை நான் அனுமதிக்க மாட்டேன் என்றார்.

அவரது பேட்டிக்குப் பின்னும் கெய்ரோ உள்ளிட்ட நகரங்களில் மேலும் வன்முறைகள் அதிகரித்தன. கெய்ரோ நகரின் தாரிர் சதுக்கத்தில் நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு பாதுகாப்புக்காகக் குவிக்கப்பட்டிருந்த இராணுவவீரர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தடுக்கவில்லை. பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவைக் கட்டடங்களுக்குச் செல்லும் பாதைகள் மூடப்பட்டன. இணையதளம் மற்றும் கைத்தொலைபேசி சேவைகளும் அரசால் துண்டிக்கப்பட்டன. பல கட்டடங்களுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

எகிப்து பிரச்சினை குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில், அமைதி வழியில் போராடும் மக்களுக்கு எதிராக வன்முறையைக் கையாள்வதை எகிப்து அரசு நிறுத்த வேண்டும். இணையத்தளம், மொபைல்போன் சேவைகள் மீண்டும் செயற்பட வேண்டும், மக்களுக்கு உறுதியளித்தபடி ஜனாதிபதி முபாரக் சீர் திருத்தங்களை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார். இந்நிலையில் பிரிட்டன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்கள் நாட்டவர்கள் எகிப்துக்கு செல்ல வேண்டாம் என எச்சரித்துள்ளன. (ஸ்ரீ)

## பேஸ்புக் மூடப்படலாம்!

இணையத்தளம் ஊடான சமூக வலைப்பின்னலான பேஸ்புக் மூடப்படலாம் என்று நம்பப்படுகின்றது. உலகில் இன்று மிகவும்




பரவலாகப் பேசப்படும் ஒரு விடயமாக இது மாறியுள்ளது.

மார்க்சுகர்பேர்க் என்பவரின் உருவாக்கம் தான் பேஸ்புக் ஆகும். பேஸ்புக்கின் ஸ்தாபகரும் உரிமையாளருமான இவரே அதைமூடப்போவதாகவும் அறிவித்துள்ளமை தான் இந்த பரபரப்புக்கு காரணம்.

அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய பேட்டியில், பேஸ் புக்கை மூடப்போவதாக அறிவித்துள்ளார். பேஸ்புக் பல அழுத்தங்களுக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் அது கட்டுப்பாட்டை மீறிச் செல்வதாகவும் தனது தனிப்பட்ட வாழ்க்கையைக் கூட அது குழப்பியுள்ளதாகவும் மார்க் சுகர்பேர்க் வழங்கியுள்ள பேட்டியில் ஒப்புக் கொண்டுள்ளார்.

பல இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டுள்ள இந்த இணையத் தள சமூக வலையமைப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 15இல் மூடப்படும் என தெரிய வருகின்றது.

பேஸ்புக் மூடப்படும் பட்சத்தில் அதில் பதிவாகியுள்ள படங்கள் மற்றும் தரவுகளை யாரும் அதற்கு மேல் பார்க்க முடியாது. எனவே தனி நபர்கள் தங்களுக்குத் தேவையானவற்றை சேமித்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலும் கூட சிலர் இது ஒரு வதந்தி என்றும் இதை நம்பத் தயாரில்லை என்றும் மறுத்து வருகின்றனர். பேஸ்புக் ஒரு உலகளாவிய வலைப்பின்னல். இதன் உறுப்பினர்கள் எண்ணிக்கை சுமார் 500 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 146 மில்லியன்பேர் அமெரிக்கர்கள். இரண்டாவது இடத்தில் 32 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டதாக இந்தோனேஷியா திகழ்கிறது. (ஸ்ரீ-2)




## லெனினின் உடலை அடக்கம் செய்ய இணையம் மூலம் வாக்குப்பதிவு

(மொஸ்கோ)

ரஷ்ய புரட்சியாளர் விளாடிமிர் லெனி



னின் உடலை அடக்கம் செய்வதற்கு இணையத்தளம் மூலம் வாக்குப்பதிவு இடம்பெறுகிறது.

ரஷ்ய புரட்சியாளரும் சோவியத் யூனியனின் முன்னாள் தலைவருமான விளாடிமிர் லெனின் 1924ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி காலமானார். அவரது உடல் கண்ணாடிப் பேழையில் பதப்படுத்தப்பட்டு மொஸ்கோவில் உள்ள செஞ்சதுக்கத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.

அவரது உடலை பாதுகாப்பதற்கு பல கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. லெனின் உடலை அடக்கம் செய்ய வேண்டும் என ஒரு தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். பின்னர் லெனினின் உடல் அடக்கத்திற்கு எதிர்ப்பு கிளம்பியதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

இந்நிலையில் ஆளும் ஐக்கிய ரஷ்ய கட்சியின் சார்பில் லெனினின் உடலை அடக்கம் செய்வது குறித்து இணையத்தளம் மூலம் வாக்குப்பதிவு நடத்தப்பட்டு வருகிறது. இதில் 74 சதவீதம் பேர் லெனினின் உடலை அடக்கம் செய்வதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். 26 சதவீதம் பேர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனினும் இந்த விவகாரத்தில் ரஷ்ய தலைவர்களிடையே இன்னும் விவாதம் நீடித்து வருவதாக கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# ஐவரிகோஸ்ட் பிரச்சினையை தீர்க்க ஐந்து நாடுகளின் தலைவர்கள் குழு

## ஆபிரிக்க யூனியன் அறிவிப்பு

ஐவரிகோஸ்டின் அரசியல் பிரச்சினையைத் தீர்க்க ஐந்து நாடுகளின் தலைவர்கள் இடம்பெறும் குழு விரைவில் அமைக்கப்படும் என ஆபிரிக்க யூனியன் அறிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட்டில் கடந்தாண்டு நவம்பரில் இடம்பெற்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் அலசான் வட்டாரா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இதை ஏற்க மறுத்த ஜனாதிபதி லாரன் பேக்போ பதவி விலக மறுக்கிறார். எனினும் இவரும் ஒரேநேரத்தில் ஜனாதிபதியாக நீடித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஐவரிகோஸ்ட் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அனுமதி அளிக் கும்படி ஐ.நா.வை ஆபிரிக்க யூனியன் கேட்டது. அதற்கு ஐ.நா.மறுத்து விட்டது. இதற்கிடையில் ஐவரிகோஸ்ட்டின் பிரதான உற்பத்தியான கொக்கோ ஏற்றுமதிக்கு அலசான் வட்டாரா தடை விதித்தார். அலசான் வட்டாரா தற்போது தலைநகர் அபிட் ஜானில் ஒரு விடுதியில் இருந்து கொண்டு தன் அரசை நடத்தி வருகிறார். அந்த விடுதியானது லாரன் பேக்போ உத்தரவின் படி இராணுவத் தால் முற்றுகையிடப் பட்டுள்ளது.

இந்நிலையில் ஐவரி கோஸ்ட் பிரச்சினையை தீர்க்க ஆபிரிக்க யூனியன் ஒரு குழுவை அமைக்கத்திட்டமிட்டுள்ளது.

ஆபிரிக்க யூனியனின் அமைதி மற்றும் பாதுகாப்பு கவுன்சில் கடந்த வெள்ளிக்கிழமை எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் கூடி இதுபற்றி விவாதித்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மவுரிடானியா ஜனாதிபதி முகமது அவுத் அப்துல் அஜீஸ், ஆபிரிக்க கண்டத்தின் ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்த ஐந்து நாடுகளின் தலைவர்கள் அடங்கிய ஒரு குழு இன்னும் 48 மணி நேரத்தில் அறிவிக்கப்படும்.

அக்குழு ஐவரிகோஸ்ட் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும். அதேநேரம் வட்டாரா தங்கியுள்ள விடுதியான முற்றுகையை நீக்கும்படி பேக்போவை கேட்டுக்கொள்கிறோம் என்றார்.

### சொக்லேற்றுக்கு தட்டுப்பாடு?

சொக்லேற் தயாரிப்புக்குத் தேவையான கொக்கோ ஏற் றுமதிக்கு ஐவரிகோஸ்ட் தடை விதித்துள்ளது. அத்துடன் கொக்கோ பயிரிடும் விவசாயிக ளும் ஐவரிகோஸ்டின் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக சென்று கொண்டிருக்கின்றனர்.

தடையின் காரணமாக கொக்கோ அண்டை நாடான கானாவுக்கு சட்டவிரோதமாக கடத்தப்படுகிறது. இதனால் 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சொக்லேற்றின் விலை இம் மாதம் 10 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே நிலை நீடித்தால் எதிர்வரும் 2014 இல் சொக்லேற்றுக்கு உலகளவில் தட்டுப்பாடு ஏற்படும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (ஸ்ரீ-2)



உலக பொருளாதார அமைப்பின் 41 ஆவது மாநாடு சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் இடம்பெற்று வருகிறது. இதில் ஜப்பான் பிரதமர் கன்நாட்டோ ஜப்பானின் பார்வை என்பது பற்றி உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

# தில்லைக்கூத்தன் திருவடியில் சிவபூஜாத்துரந்திரர்

மானிடராப் பிறந்து, செயற்கரிய செயல் புரிந்து, சிவபக்தியினால் பெருமைபெற்று, சிவனாடியார்களாகி, சிவசின்னங்களை மதித்து, பூஜித்து, சிவ பூஜையாற்றி, சிவத்தியானம் செய்து, சிவனடியார்களை அறுபத்து மூவரையும் இடைவிடாது சிந்தித்து வந்தித்து சிவசின்னங்கள் அணிந்தோரை வணங்கிப் போற்றி, சிவபூஜர்த்தூரந்திராகத்திகழ்ந்து விகிர்திதியில் தில்லைக் கூத்தனின் திருவடியை அடைந்தார். அப்பு என்று குடும்பத்தினரால் ஆசையுடன் அழைக்கப்பெற்று

**அகில இலங்கை திருமுறை மன்றத்தின் உப தலைவராகப் பணியாற்றி சிவபதம் அடைந்த அமரர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியத்தின் 31ஆம் நாள் நினைவு தினம் இன்றாகும்.**

புகழ்பூத்து வாழ்ந்து காட்டியவர் அமரர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள்.

நிலைபெறுமா எண்ணுதியேல் ....

என்ற அப்பரின் தேவராம் காட்டும் திருவாக்கிற்கமைய வாழ்ந்து காட்டியவர்.

அமரர் சுவசுப்பிரமணியம் அவர்கள் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் துணைவியாருடன் தலயாத்திரை சென்று சிவனடியார்களுக்கு அமுதூட்டி ஆங்காங்கு பலருக்கு பலவாறு உதவிகளைப் புரிந்துள்ளார்.

எவர் ஒருவர் பரோபகார சிந்தனையுடன் பிறருக்கு உதவி செய்து பிறர் நலன் கருதி வாழ்கிறாரோ் அவர் மனிதர்களில் உத்தமர். தெய்வத்திற்கு சமமானவர் என்றெல்லாம் புனிதமான பெரியோர்களைப் பற்றி சிறப்பாக சொல்லப்பட்டிருக்கின்றது.


அந்த வரிசையில் தெய்வீகத்தன்மையோடு நம் முன் வாழ்ந்து காட்டியவர் அப்பு சிவசுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள்.

இவர் புராணபடன வித்தகர்ராகவும், தோவாரப் பாடல்களை நாவரப் பண்ணுடன்

**இ.கிருஷ்ணமூர்த்தி**
**அமைப்பாளர், அகில இலங்கைத் திருமுறை மன்றம்.**

பாடவேண்டுமென அவர் ஆற்றும் சொற்பொழிவுகளில் கூறிவந்துள்ளார்.

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தின் உபதலைவராகப் பணியாற்றும் போது ஆலயங்களில் இடைவிடாது திருமுறைப் பாராயணம் பண்ணோடு ஓதவேண்டும் என வாராந்த பஞ்சபுராணப் பாடல்களைத் தொகுத்து நூல் வடிவிலும் ஒலிப்பதிவு நாடக்களிலும் வெளிவரச் செய்ய வெண்டும் என்ற அவாவை நாளிலும் பொழுதிலும் எம்மை அழைத்து கட்டளை இட்டுள்ளார்கள். அவை இன்று ஒலிப்போழையாக வெளிவரவுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று.



அருளையவிருப்பில் வட இலங்கை சங்கீத சபையினதும், அகில இலங்கைதிருமுறைமன்ற தேவாரப் பண்ணிசைப் பாடவிதான பாடல்களையும்முழுமையாக நூல் வடிவில்வெளியிடவேண்டும் எனவும் அதற்கான முழு ஒத்துழைப்பையும் தான் வழங்குவேன் எனவும் அதனை தாமதியாது முயற்சிக்கவும் எனவும் கூறியிருந்தார்கள்.


எனவே அவர் தேவார திருமுறைகளில் அதிக பற்றுள்ளவராக இருந்ததின் காரணத்தால் அவர் உயிர் பிரியும் போது அகத்தியர் தேவராத் திரட்டை ஓதியவண்ணம் தில்லைக் கூத்தன் திருவடியைச் சேர்ந்துள்ளார்.

தேவாரப்பதிகங்களை முழுவதும் பாராயாணம் செய்தபேறு, அகத்தியர் தேவராத் திரட்டை பாராணயம் செய்பவருக்கு கிடைக்கும். இவர் இகத்திலும், பரத்திலும் நல்வாழ்வுக்கு உரியவர்.

◆◆◆

# நயினைச்சித்தர் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமிகள்

**நீத்தார் நயப்புரை**



ஈழத்துச்சித்தர்கள் வரிசையில் வைத்து மதிக்கப்படுபவரும் நயினதீவுச் சுவாமிகள் என அழைக்கப்படுபவருமாகிய நயினை ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமிகள் ஆறுமுகம் பார்வதி தம்பதியினருக்கு மகனாக 1896 இல் அவதரித்தார். இவரது இயற்பெயர் தம்பி முத்து என்பதாகும். இவர் தனது கல்வியை நயினாதீவு தில்லையம்பலம் வித்தியாலயத்தில் பயின்றார். இளவயதிலிருந்தே இவரிடம் ஆன்மீக நாட்டமும் கவிபாடும் தறனும் இருந்து. கல்வியில்நாட்டம் குறைந்து ஆன்மீகத்தாகம் மிக்கவராய் காணப்பட்டார். இவருக்கு இந்தியாவைச் சேர்ந்த ஞான குரு சுவாமிகள் இலங்கை வந்த போது தீட்சையும் உபதேசமும் அளித்தார்.

முத்துக்குமார சுவாமியும் ரமண மகரிசியைப் போன்றே மூத்த சகோதரனது கோபங் காரணமாகவே துறவுபூண்டார் எனக் கூறப்படுகிறது. முத்துக்குமார சுவாமிகளுக்கு ஞான குரு சுவாமியைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல்மேலிட்டதால் அவரைத் தேடி இந்தியாவுக்குச் சென்றார். அவரைக் கண்டு அவர்நிழலில் தங்கி பக்குவ நிலையை எய்தினார். திருவண்ணாமலையில் சித்தர்களும் தவயோகிகளும் வாழும் அருணா சலக் குகைகளில் சில வருடங்கள் சமாதி நிட்டையில் அமர்ந்திருந்தார்.

பின்னர் சுவாமிகள் ரமண மகரிசியுடன் சில காலம் தங்கியிருந்து அவரின் ஆன்மீக போதனைகளால் கவரப்பட்டு தவயோக வாழ்வு வாழ்ந்தார். பின்னர் இலங்கை திரும்பி கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் உள்ள திருத்தலங்களையும் தரிசனம் செய்தார். நீண்ட நாட்களின் பினண் 1933ஆம் ஆண்டு சுவாமிகள்நீண்ட சடையுடன் காவியுடை தரித்து நயினாதீவுக்கு வந்து அம்பி கையின் வருடாந்த உறசவத்தில் கலந்து கொண்டார். அம்பாள் அலய வடக்கு வீதியில் அன்னப்பிள்ளை மடத்தில் தங்கி அருளாசி வழங்கினார். தற்போது இந்த மடம் தியான மடமாகத் திகழ்கிறது.

சுவாமிகளின் வழிகாட்டலின் கீழ்சுவாமிகளைக் குருவாக ஏற்றவர்கள் நயினை க.இராமச்சந்திரா அவர்களும் பெரிய வாத்தியார் என்று ஊர்மக்களால் அழைக்கப்பட்ட அதிபர்ச.நா.கந்

**நயினை நாக.கோபாலகிருஷ்ணன்**
**சமாதான நீதவான்**

தையாவும் ஆத்மசோதி நா. முத்தையாவும் ஆவர். இவர்கள் பின்னர் இந்தியா சென்று ரமணமகரிசியை தரிசித்தும் ஆசி பெற்றனர்.

யாழ்ப்பாணத்திலும் பல சீடர்கள் சுவாமிகளின் அருளாசிக்குப் பாத்திரமாகி தங்கள் இல்லங்களில் சுவாமிகளை வரவழைத்து பாதபூசை செய்து அருள் ஆசி பெற்றனர். சிவலிங்கப்புளியடியை, சுவாமிகள் பிற்கால வதிவிடமாகக் கொண்டார்கள்.

இவ்விடத்தைச் சேர்ந்த, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையல் அதிபராக இருந்த அமரர் திரு. சண்முகரத்தினம் அவர்கள் மூலமாகத்தான் சுவாமிகள், நயினாதீவின் தென்


**சித்தர்கள் வாழ்ந்த இடங்கள் புனிதத்தன்மை நிறைந்தவை. அங்கு தெய்வீகச் சிந்தனைகள், தெய்வீக அலையாக வீசும். பக்தர்களை ஈர்க்கும்; இத்தகைய தெய்வத் தன்மை பொருந்திய நயினை ஸ்ரீமத் குமாரசுவாமிகளின் குருபூசைதினம் இன்றாகும்.**

மேற்கு கடலோரமா, கங்கா தரணி என்னும் பெயருடைய தீர்த்தக்கேணியை தோண்டிவித்தார். இக்கேணியை ஒட்டி தீர்த்தக் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கீரிமலைக் கேணிக்கு சமமாக இக்குகேணி போற்றப்படுகிறது . நயினாதீவில் உள்ள அனைத்து ஆலயங்களின் தீர்த்தத் திருவிழா இக்கேணியில்தான் நடைபெறுகிறது.இது ஒரு புனித தீர்த்தம்.சுவாமிகளின் அருளாசிபெற்ற கந்தையாவே பிற்காலத்தில் குடையிற்சுவாமிகளானார் என்று வரலாறு கூறுகின்றது.

யாழ்.வண்ணார்பண்ணை சிவலிங்கப் புளியடியில் அமைந்த தன்னடியார் சிவசுப்பிரமணியம் என்பவரின் இல்லத்தில் தங்கி இருந்து அருளாசிநல்கிய சுவாமி, சர்வதாரி வருஷம் உத்தராயண காலத்தில் தைத்திங்கள் 13 ஆம் நாள் 26.01.1949 ஆம் ஆண்டு சமாதியடைந்தார். சுவாமிகளின் திருவுடல் நயினா தீவில் காட்டுக் கந்தன் ஆலயத்தின் பின்புறமாக சமாதி வைக்கப்பட்டு சோமஸ்கந்த ஈஸ்வரர் ஆலயமாகத்திகழ்கிறது. சித்திர முத்தடிகளால் ஆரம்பிக்கப்பட்ட அருள் ஒளிமடமும் பக்கத்தே அமைந் திருக்கின்றது. சுவாமிகளின் குரு பூசை வருடா வருடம் சுவாமிகளின் சமாதி ஆலயமான சோமஸ்கந்த ஈஸ்வரர் ஆலயத்தில் அநுஸ் டிக்கப்படுகிறது. சித்தர்கள் நடமாடிய இடங் கள் புனிதத் தன்மை வாய்ந்தவை. சித்தர்களுடைய தெய்வீகமான சிந்தனைகள் அவர்கள் இருந்த இடங்களிலே எக்காலத் திலும் தெய்வீக அலைகளாக நிலவி பக்தர் களை ஈர்த்து இழுக்கும் சக்தியுடையது.

பழனிமலையில் போகர் சித்தரின் சமாதி அமைந்திருக்கிறது. வண்ணார் பண்ணையின் கடையிற்சுவாமிகள் சமாதியும் நல்லூர் ஆலயத்தின் அருகே செல்லப்பா சுவாமிகள் சமாதியும் ஏழாலையில் சடைவரத சுவாமிகளின் சமாதியும் நயினை நடுவ காட்டில் நையினைச்சித்தரின் சமாதியும் சித்தர்களின் மகிமைக்குச் சான்றாக உள்ளன.

# என்றென்றும் இசை வாழ "தண்ணுமைத் தண்ணொலி"




இலங்கையில், கலைகளின் உறைவிடமாய் விளங்குவது யாழ்ப்பாணம். சுருதியும் லயமும் சோபிக்க, வாலாயமாக விளங்குவதுடன் சாதனை புரிவதும் யாழ். மண்ணாகும். அந்த வகையில், 'தண்ணுமைத் தண்ணொலி' என்னும் மிருதங்க செயன்முறை விளக்க நூல் அண்மையில் சம்பிரதாய பூர்வமாகவும் சாதனை யாகவும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

குரு - சிஷ்ய பாரம்பரியத்தின் வெற்றிக்கு வழிசமைத்த பேற்றினை, குருவாகிய கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களும் நூலாசிரியரும் சிஷ்யனுமாகிய மாதவன் எம்.ஏ அவர்களும் தனதாக்கியமை குமார சுவாமி மண்டபத்தின் சிறப்பம்சமாகும்.

இந்நூலானது மிருதங்கம் பயிலும் மாணவர்களுக்கும் அதனைப் போதிக்கும் ஆசான்களுக்கும் செயன்முறையாக விளங்கவும் விளக்கவும் ஆற்றுப்படுத்துகின்ற முதல் நூலாகக் கருதப்படுகின்றது. இசை, நடனத்துறை சார்ந்தவர்களுக்கும் நாடகம், சந்தக்கவி இலக்கியம் படைப்போருக்கும் வாய்ப்பான நூலாக அமைவதால் மாதவன்-மாதவமுடைய உன்னத ஸ்தானத்திற்கு, காத்திரமான ஒரு கலைச் சமூகத்தினரால் உயர்த்தப்படுகின்றார்.

**"தண்ணுமைத் தண்ணொலி" தாளலய விஸ்தார மிருதங்க செயன்முறை விளக்க நூல் வெளியீடு ஒரு கண்ணோட்டம்.**

வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பல்கலைக் கழகப் பாடாந்தரங்களுக்கும் ஏற்றதாக எளிதாகவும், துல்லியமாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. லயம் மீதிருக்கும் பயம் நீக்கும் பலங் கொண்டது இந்நூல். எல்லா வகை எடுப்புக்களிற்குமான ஐந்து ஜாதி தகிங்கிணதொம் முறைகள், நெருடலான பெரிய மோறாக்கள், முத்தாய்ப்புத் தீர்மானங்கள், தாளலய விஸ்தாரங்கள் என வாலாயமாக, வரம் தருநூலாக இது வெல்லப்படுகின்றது. அல்லாமலும் 19.01.2011இல், பெரியோர்கள் முன்னிலையில் செயன்முறையாக அரங்கேற்றமும், சமர்ப்பணமும் செய்யப்பட்டது.

பேராசிரியர் ஏ.எஸ்.இராமநாதனின் மிருதங்க சீட பரம்பரை, கலாபூஷணம் க.ப.சின்னராசா வாயிலாக 'இன்று முதுகலை தாள இயல்' வல்லுநராக *(Rhythmology)* பட்டம் பெற்ற, நாகரத்தினம் மாதவன் அவர்கள், சென்னை பல்பலைக்கழகத்தில் *M.Phil* கற்கையாளராகவுள்ள அதேவேளையில், தகைமையால் சிறந்த இந்நூல், வரலாற்றில் ஓர் ஏடாக வெளிவருகிறது. காத்திரமான ஒரு நூல் உங்கள் கைகளுக்குக் கிடைக்குமானால் நீங்கள் லயத்தின் பாக்கியவான்களாக மிளிர்வீர்கள்!

இன்நூல் வெளியீட்டில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட பேராசிரி யர் திரு.க.கந்தசாமி அவர்கள் தலைமைவகித்தார். கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் திரு.நா.ஞானக்குமரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் இசைத்துறைத் தலைவர் கலாநிதி ந.வி.மு.நவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

**இசையாசிரியர்**
**கே.எஸ்.சிவஞானராஜா**
**யா/ஆனைக்கோட்டை**
**பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.**

இசைத்துறை விரிவுரையாளர் இசைமாணி தவநாதன் றொபேட் மதிப்புரை வழங்கிச் சிறப்பிக்க, கலாபூஷணம் க.ப.சின்னராசா, கலாபூஷணம் மா.சிதம்பரநாதன் இருவருமாக ஆசியுரை வழங்க யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டப அரங்கில் மிகச்சிறப்புறவும் அழகுறவும் இந்நிகழ்வு அரங்கேறியமை மாதவனினி படைப்புக்குக் உயிர் கொடுத்திருக்கிறது.





சுவாமி விவேகானந்தர் விழா அண்மையில் யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் அதிபர் க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் பக்திகீதம் இசைப்பதையும் தரம் 6 இல் புதிதாகச் சேர்ந்த மாணவர்களுக்கு ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் சார்பில் பசுப்பால் வழங்கப்படுவதையும் அருகில் சுவாமி சித்ரூபானந்தா நிற்பதையும் படங்களில் காணலாம்.

# மன்னாரில் பொலிஸ் சேவைக்கு ஆட்களை சேர்ப்பதற்கான ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இளைஞர், யுவதிகளை இலங்கை பொலிஸ் சேவைக்கு சேர்த்துக் கொள்ளும் முகமாக மன்னார் நகர் மற்றும் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களிலும் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் இதற்கான அறிவித்தல்களை வழங்கி வருகின்றனர்.

பொலிஸ்மா அதிபர் மஹிந்தபால சூரியவின் விசேட பணிப்பின் பேரில் மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சிக் கல்லூரி பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.செல்வராஜா மன்னார் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளிலிருந்து 50 ஆண்களும் 25 பெண்களும் உதவிப் பொலிஸ் பரிசோதகர்களாக தெரிவுசெய்யப்படவுள்ளனர். பொலிஸ் கான்ஸ்டபிள்களாக 350 ஆண்களும் 50 பெண்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அத்துடன் 25 பொலிஸ் சாரதிகளும் நியமிக்கப்படவுள்ளனரென இதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரி பணிப்பாளர் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை பொலிஸ் நிலையங்களிலும் அரச அதிபர் காரியாலயத்திலும் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் இதற்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 25.02.2011 என்றும் அவர் தெரிவித்தார்.

விண்ணப்பப்படிவங்களை பணிப்பாளர் பொலிஸ் ஆட்சேர்ப்பு காரியாலயம், இலக்கம் 375 கெவ்லொக் றோட், கொழும்பு-06 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் 2010.12.24 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியை பார்வையிட முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# 45 நாட்களுக்குள் விளைச்சலை தரக்கூடிய மரக்கறிச் செய்கை

## கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு கவனம்

45 நாட்களுக்குள் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய மரக்கறி வகைகளை செய்கை பண்ணுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நிலவுகின்ற மரக்கறிப் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் இந்தத் திட்டம் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை கூட்டுறவு மொத்த விற்ப னை நிலையங்கள் ஊடாக கொள்வனவு செய்து பொருளாதார மத்திய நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத்திட்டம் வெற்றியளித்தால் மரக்கறி வகைகளுக்கு உள்நாட்டு சந்தையில் நிலவும் கேள்வியில் 20 சத வீதத்தை பூர்த்தி செய்ய முடியும் எனவும் கூறினார்.

மக்கள் அதிகளவு கொள்வனவு செய்யும் மரக்கறி வகைகளை செய்கை பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-9)

# தென்மராட்சி மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற வேண்டியது அவசியமாகும்

## பிரதேச செயலர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பிரதேசத்தை பொறுத்த வரை கடந்த கால யுத்தத்தின் பின் மக்களின் தேவைகள் இனங்காணப்பட்டு பூர்த்திசெய்யப்படவேண்டியது அவசியமாகுமென பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்ட பத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அப்பகுதி மக்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இராணுவத்தினரால் வழங்கப்படும் உதவிகளுக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு இராணுவத்தினர் இது வரைகாலமும் பல முன்னேற்றகரமான உதவிகளை வழங்கி வந்துள்ளனர்.

மக்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு கோழி வளர்ப்புத் திட்டம், வீட்டுத் தோட்டத்திற்கான தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டதுடன் தொலைபேசிகள், துவிச்சக்கரவண்டிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு அரிய சந்தர்ப்பம் ஆகும்.

அதுமட்டுமன்றி தென்மராட்சி, பிரதேச மக்களுக்கும் பல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகங்களால் நிதியுதவி என்று எதுவும் வழங்கப்பட முடியாத நிலையில், இவ்வாறான உதவிகளை இராணுவத்தினர் வழங்குவது பாராட்டக்கூடிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# வேட்புமனுக்களை சரியாக பூர்த்திசெய்ய முடியாதவர்கள் சவால் விடுகின்றனர்

## சஜித் எம்.பி. விமர்சனம்



(கொழும்பு)

வேட்பு மனுக்களை சரியான முறையில் பூர்த்தி செய்ய முடியாத நபர்கள் தமக்கு சவால் விடுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். இவ்வாறானவர்கள் தம்மை விமர்சனம் செய்து நகைப்புக்குரியதென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிங்கள மொழியை சரியான முறையில் எழுதத் தெரியாத காரணத்தினால், ஹோமகம பிரதேச சபை வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், தமக்கு சவால் விடுவிப்பதற்கு முன்னர் மொழியை சரியாகக் கற்றுக் கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சியை மேலும் மேலும் பின்னடைவுக்குள்ளாக்க சிலர் சூழ்ச்சி செய்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தேர்தலில் கட்சியை வலுப்படுத்தி வெற்றியீட்டச் செய்வதே தமது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாசவிற்கும், ரவி கருணாநாயக்கவிற்கும் இடையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் மோதல்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் ஓர் கட்டமாகவே சஜித் பிரேமதாச இந்த பகிரங்க விமர்சனத்தை வெளியிட்டுள்ளார். எஸ்ரீ-

# தற்காப்புக்காக துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதியளிக்குமாறு தமிழக மீனவர்கள் மனு

(சென்னை)

இலங்கைக் கடற்படையினரிடமிருந்து தற்காத்துக்கொள்ள பாரம்பரிய மீனவர்களுக்கு துப்பாக்கி வைத்துக்கொள்ள உரிமம் வழங்கவேண்டும் என காவல்துறை கூடுதல் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணனிடம் மீனவர் அமைப்பினர் வெள்ளிக்கிழமை மனு கொடுத்தனர்.

தென்னிந்திய மீனவர் நலச் சங்கம், கடலோர மக்கள் பாதுகாப்பு இயக்கம், தமிழ் நாடு மீனவர் மக்கள் பேரவை ஆகிய மூன்று மீனவர்கள் அமைப்புக்களின் சார்பாக இந்த மனு அளிக்கப்பட்டது.

இம் மனுவில், பாரம்பரியமாக மீன்பிடித் தொழில் செய்துவரும் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு நடத்தி வருகிறார்கள். இதனால் கடந்த ஆண்டுகளில் பல மீனவர்கள் பலியாகியிருக்கிறார்கள். இந்தத் துப்பாக்கிச் சூடு சமீப காலமாக அதிகரித்து வருகிறது.

மேலும் மீனவர்களின் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள விசைப்படகுகள், வலைகள், நவீன மீன்பிடிக் கருவிகள் உள்ளிட்டவை இலங்கைக் கடற்படையினரால் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் பல மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் படுகாயமடைந்தும் உடல் ஊனமுற்ற நிலையிலும் பல மீனவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இதனால் மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல முடியாமல் அவர்களின் குடும்பத்தினர் வறுமையில் வாடி வருகின்றனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் தமிழக மீனவர்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்புத் தரவேண்டிய இந்தியக் கடற்படையும் கடலோரக் காவல்படையும் தமிழக காவல்துறையும் உரிய பாதுகாப்பைத் தர முயலவில்லை.

எனவே, தமிழகத்தில் பாரம்பரியமாக மீன்பிடித் தொழில் செய்து வரும் மீனவர்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள காரணத்தால், ஒவ்வொரு மீனவருக்கும் தற்காப்புக்காக குறைந்தபட்சம் துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி வழங்கவேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# சுற்றுலாப் பயணிகளுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை


(கொழும்பு)

எதிர்வரும் ஐந்து வருட காலப்பகுதியினுள் இலங்கை வரும் உல்லாசப் பயணிகளுக்கான சகல வதிகளையும் செய்து கொடுப்பதற்கு இலங்கை சுற்றுலாத்துறை தயாராகவுள்ளதாக, அதன் தலைவர் நாலக்க கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கடந்த ஆண்டில் 6இலட்சத்து 54 ஆயிரம் உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாக தெரிவித்த அவர், இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 46 சதவீதம் அதிகரிப்பு எனவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் 2016ஆம் ஆண்டளவில் 25 இலட்சம் உல்லாசப் பயணிகள் இலங்கை வருவர் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ)



காந்தியடிகளின் 63 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் நேற்று நடைபெற்றன. இதில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள காந்தி அடிகளின் சிலைக்கு அகில இலங்கை காந்தி சங்கத் தலைவர் ஆ.வடிவேல் மலர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் மலர் வணக்கம் செலுத்துவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# நிட்டம்புவயில் கிளைமோர் குண்டுகளும் கைக்குண்டுகளும் பொலிஸாரால் மீட்பு

நிட்டம்புவ பிரதேச தோட்டம் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு ஒன்றையும் நான்கு குண்டுகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த குண்டுகள் கைப்பற்றப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபயமெதவல கூறியுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கிளைமோர் குண்டு சுமார் 21 கிலோகிராம் எடையைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத்தின் விசேட குழுவொன்று நேற்று முன்தினம் நிட்டம்புவ பிரதேசத்திற்குச் சென்று குண்டுகளை கைப்பற்றியுள்ளதாக மேஜர் ஜெனரல் உபயமெதவல குறிப்பிட்டுள்ளார்.

இக்குண்டுகள் காலாவதியான குண்டுகள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-9)

# அநுராதபுர சிறைச்சாலை தாக்குதல் சம்பவம் குறித்த விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் கைதிகள் மற்றும் நிர்வாகிகளுக்கு இடையில் அண்மையில் ஏற்பட்ட முரண்பாடுகள் தொடர்பாக சாட்சியங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு என்பவற்றின் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக சிறைச்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி சிறைச்சாலைகள் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு அமைவாக சம்பவம் இடம்பெற்ற அநுராதபுரம் சிறைச்சாலையின் அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னரே இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அமைச்சின் மேலதிக செயலாளரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த விசாரணைகளின் அறிக்கை எதிர்வரும் வாரம் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இதேவேளை இன்றைய தினம் சிறைச்சாலைகள் அமைச்சர் உட்பட்ட அதிகாரிகள் குழுவொன்று அம்பேபுஸ்ஸ, போகம்பரை மற்றும் பல்லேகலை ஆகிய சிறைச்சாலைகளில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

குறித்த சிறைச்சாலைகளில் நிலவுகின்ற குறைபாடுகளை இனங்காணுவதே இந்த விஜயத்தின் நோக்கம் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

## போலி விசாக்களை பயன்படுத்தி

# இத்தாலி செல்ல முயன்ற 2 யாழ்.இளைஞர்கள் கைது

(கொழும்பு)

போலி விசாக்களைப் பயன்படுத்தி இத்தாலி செல்ல முயன்ற இரண்டு யாழ்ப்பாண இளைஞர்களை பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

இத்தாலியிலிருந்து கிடைக்கப்பெற்ற விசாக்களைப் பயன்படுத்தி பயணம் செய்யவிருந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசா ஆவணங்களில் காணப்பட்ட குழப்ப நிலைமையினால் சந்தேகத்தின் பேரில் குறித்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஐ. என்.எம்.பெரேரா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசின் திட்டங்களுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக தாம் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாக பொது விமான சேவைகள் அமைச்சர் பிரியங்க ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு எதிரான போக்கை சில அரச அதிகாரிகள் கொண்டுள்ளமை தமக்கு தெரிய வந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனைமடுவ பிரதேசத்தில் நேற்று காலை இடம்பெற்ற மக்கள் சந்திப் பொன்றில் கலந்து கொண்டு உரையாடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# அஞ்சல் மூலம் வாக்களிக்க இதுவரை 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பொருட் டு அஞ்சல் மூலம் வாக்களிக்க இது வரை இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வரை விண்ணப்பித்துள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

தேர்தல் காரியாலயங்களுக்கு விண்ணப்பங்கள் கிடைக்கும் முறைமைக்கிணங்க தெரிவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனடிப்படையில் குருநாகல் மாவட்டத்திலேயே அதிக அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதோடு இதன்போது 43 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக அநுராதபுரம் மாவட்டத்தில் 40 ஆயிரம் விண்ணப்பங்களும் கேகாலை மாவட்டத்தில் 18ஆயிரம் விண்ணப்பங்களும் பொலனறுவை மாவட்டத்தில் 14 ஆயிரம் விண்ணப்பங்களும் இரத்தினபுரியிலிருந்து 13 ஆயிரம் விண்ணப்பங்களும் கிடைத்துள்ளதாக தேர்தல் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை களுத்துறை மாவட்டத்தில் 16ஆயிரம் அஞ்சல் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இதனிடையே உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக அஞ்சல் மூல வாக்களிப்பிற்காக விண்ணப்பிற்கும் கால அவகாசம் இன்றுடன் நிறைவெய்கிறது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது நாடளாவிய ரீதியாக சுமார் 4 இலட்சம் அரச சேவையாளர்கள் விண்ணப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# கார்மேல் கிராம மக்களின் பிரச்சினைகள் குறித்து செல்வம் எம்.பி. ஆராய்வு

(கொழும்பு)

கடந்த கால யுத்தத்தின் போது இடம் பெயர்ந்து மீள் குடியேறியுள்ள முசலி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கார்மேல் நகர் கிராம மக்கள் தொடர்ந்தும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கார்மேல் நகர் கிராமத்திற்கு நேற்று முன்தினம் மாலை விஜயம் செய்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அக்கிராம மக்களை சந்தித்து அவர்களின் குறைநிறைகளை கேட்டறிந்துகொண்டார்.

அக்கிராமத்தில் சுமார் 50 குடும்பங்களை சேர்ந்த 350 பேர் வரை உள்ளனர். அக் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட பாடசாலை இயங்காமலுள்ளமை, ஆலயம் புனர் நிர்மாணம் செய்யப்படாமலுள்ளமை, விவசாயம் செய்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினை உள்ளிட்டவை குறித்து செல்வம் அடைக்கலநாதனின் கவனத்திற்கு அக்கிராம மக்கள் கொண்டு வந்தனர்.

குறித்த பிரச்சினைகளை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் முதற்கட்டமாக தனது ஒதுக்கீட்டு நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாவை குறித்த கிராமத்திற்கு தருவதாகவும் இனி வரும் காலங்களில் எனது அபிவிருத்தி பணிகள் நகர்ப்புறங்களை விட்டு கிராமங்களுக்கே வழங்கப்படும் என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக மாவட்ட முகவர்கள் நியமனம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகள் தேர்தல் நடவடிக்கைகளுக்காக கட்சி முகவர்களை நியமித்துள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னாள் அமைச்சர் அமீர் அலியையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதியமைச்சர் பசீர் சேகுதாவூதையும் ஐக்கிய தேசிய கட்சி கிழக்கு மாகாண சபை உறுப்பினர் அரசரட்ணம் சசிதரனையும் மக்கள் விடுதலை முன்னணி லாபீர்கானையும் நியமித்துள்ளது என மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்தார்.

(ஸ்ரீ)

ஆண்டு முழுவதும் வேலை தேடி அலைவதைவிட ஒரு மரத்தை நட்டு அதிக பயனைப் பெறலாம்.

– துருக்கி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ஊதியம் இல்லா உழைப்பில் எங்கள் இளம் சமூகம்

யாழ்ப்பாண நகரம் இப்போது தென்பகுதியிலிருந்து வந்துள்ள தனியார் நிறுவனங்களால் சுவாசிக்க முடியாமல் திணறுகின்றது.

நகர மையத்தில் காணப்பட்ட ஒன்றிரண்டு வெற்றுக் காணிகளும் இப்போது கட்டிடங்களினால் நிரம்பிக்கொள்ள, வாகனங்கள் புகையைக் கக்க, வீதிப்புழுதி சுற்றி வளைக்க, யாழ்ப்பாண நகரம் மனித ஆரோக்கியத்திற்கு உகந்த இடமல்ல என்ற பெயரைப் பெற்றுவிட்டது.

கூடவே நகரத்தில் திரளும் சனக்கூட்டம், ஐயா! யாழ்ப்பாண நகரப் பக்கமே போகவேண்டாம் என்ற மனநிலையைப் பலருக்கு ஏற்படுத்திவிட்டது எனலாம்.

நிலைமை இதுவாக இருக்க, தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள தனியார் நிறுவனங்கள் பயிற்சி என்ற பெயரில் யாழ்ப்பாணத்து இளைஞர், யுவதிகளின் மனித உழைப்பை ஊதியம் எதுவுமில்லாமல் பெற்றுக்கொள்வதைப் பார்க்கும்போது வேதனை நெஞ்சை அடைக்கிறது.

நிதிசார்ந்த அமைப்புகள் குறிப்பாகக் 'காப்புறுதி' யோடு தொடர்புபட்ட அமைப்புகள் பொதுமக்களிடமிருந்து காப்புறுதிக்கான நிதியை வசூலிப்பதற்காக, ஆறு மாதப் பயிற்சி என்ற பெயரில் இளைஞர், யுவதிகளைக் களத்தில் இறக்கியுள்ளன.

பாவம் எங்கள் இளம் சமூகம். வேலைவாய்ப்பு இல்லாத நிலையில் – சுயதொழில் முயற்சிக்கான ஊக்குவிப்பு கிடையாத சந்தர்ப்பத்தில் இத்தகைய பயிற்சிகளில் இறங்குகின்றனர்.

பயிற்சி முடிபடைந்த பின்னர் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் வீடு வீடாக, கடை கடையாகத் திரிந்து களைத்துக் காப்புறுதிகளைச் சேர்த்துக் கொடுக்கின்றனர்.

'பயிற்சி' என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தென்பகுதி நிறுவனங்கள் ஊதியம் வழங்காமல் தங்கள் அலுவல்களைக் கச்சிதமாகச் செய்து முடிக்கின்றன.

என்ன செய்வது? காலனித்துவக்கால அடிமைத்தனம் இப்போதும் ஏதோவொரு வகையில் யாழ்ப்பாணத்தில் நடந்துகொண்டுதான் இருக்கிறது.

எங்கள் இளைஞர் சமூகம் தங்கள் சொந்தக் காலில் தனித்தும் – கூட்டாக இணைந்தும் சுயதொழில் முயற்சிகளில் இறங்காதவரை ஊதியமில்லா உழைப்பைத் தடுப்பது முடியாத விடயமே.

ஓ! இளம் சமூகமே, சற்றுச் சிந்திக்குக.

# போர்க்குற்றத்தை மறைப்பதற்கே கொழும்பில் இராணுவ மாநாடு

## கொழும்பு அரசியலில் குற்றச்சாட்டு

வன்னிப் போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை மறைக்கும் நோக்குடனேயே அரசாங்கம் சர்வதேச படைத்தரப்பு மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வருடம் மே மாதம் 31ஆம் திகதி முதல் ஜுன் மாதம் 2ஆம் திகதி வரை தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சர்வதேச படைத்தரப்பு மாநாட்டை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 54 நாடுகளைச் சேர்ந்த 100 வரையான பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிலையில், படைத்தரப்பின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்துச் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முறியடிக்கும் நோக்கத்துடனேயே அரசாங்கம் சர்வதேச படைத்தரப்பு மாநாட்டை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இச்சர்வதேச மாநாடு குறித்துக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட படைத்தளபதி லெப். ஜெனரல் ஜகத் ஜயசூரிய, இம்மாநாட்டைப் போர் முடிபடைந்தவுடன் ஏற்பாடு செய்திருந்தால் போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு முகம் கொடுத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது எனத் தெரிவித்துள்ளமையே இம்மாநாட்டின் நோக்கங்கள் குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இம்மாநாடு தொடர்பாக இராணுவத் தளபதி கூறியதாவது, இச்சர்வதேச மாநாட்டை நடத்துவதற்கு மிகவும் நீண்ட நாட்கள் எடுத்துவிட்டது என்பதே எனது தனிப்பட்ட கருத்து. விடுதலைப் புலிகளுடனான போர் முடிபடைந்தவுடன் இம்மாநாட்டை நடத்தியிருக்க முடியும். அவ்வாய்ப்பை பயன்படுத்தியிருந்தால் விடுதலைப்புலிகளுடனான போரின்போது என்ன நடந்தது என்பது உலகத்துக்குத் தெரிந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிபடைந்தவுடன் இம்மாநாட்டை நடத்தியிருந்தால் போர்க்குற்றச்சாட்டுகளுக்கு நாம் முகம் கொடுத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் அப்போது உண்மை நிலையைப் புரிந்திருப்பார்கள். ஆயினும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் விரைவில் முறியடிக்கப்பட்டுவிடும்.

இந்நோக்கத்திற்காகவே சர்வதேச தீவிரவாத முறியடிப்பு நிபுணர்களையும் களத்தில் செயற்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் உப அமைப்புகளின் பிரதிநிதிகளையும் போரின்போது என்ன நடந்தது என்பது தொடர்பாக உரையாற்றுவதற்காக இம்மாநாட்டுக்கு அழைத்துள்ளோம்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் மீள அமைக்கப்பட்ட இராணுவ தளபாடங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யத் தயாராகவுள்ளோம். தமிழீழ விடுதலைப்பு லிகளுக்கு எதிரான படை நடவடிக்கையின் போது பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யவுள்ளோம்.

பொது நிகழ்ச்சிகள் மற்றும் கூட்டங்களை கண்காணிக்கவும் இவ்வாறான நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் உதவக்கூடிய ஆளில்லாத சிறிய உளவு விமானமும் இவ் விற்பனையில் அடங்கும் எனவும் ஜகத் ஜயசூரிய கூறியுள்ளார். (ச–5)

# பொருட்களின் இறக்குமதி மூலம் விலையைக் கட்டுப்படுத்த முடியாது

## அமைச்சர் ரட்ணசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாது என நல்லாட்சி அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணைப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு உற்பத்திகளை உயர்த்துவதன் மூலம் பொருட்கள், சேவைகளின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்தால் எதிர்காலத்தில் வெளிநாடுகளிடம் கையேந்த நேரிடும்.

முக்கிய உணவுப் பொருட்கள் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதே மிகவும் முக்கியமான இலக்காக அமைய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிட்டதன் காரணமாக அமைச்சர் ரட்ணசிறி விக்ரம நாயக்க அண்மை யில் பெரும் சர்ச்சைகளை எதிர்நோக்கி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் சுதந்திர தினத்தன்று விடுதலையாவர்

## புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

சுதந்திர தினத்தன்று ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் எஸ்.ரணசிங்க தெரிவித்தார்.

புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் போராளிகளினால் ஆக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் புத்தளவில் நடைபெறவுள்ள தயட கிருள கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் எஸ்.ரணசிங்க தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையங்களில் 4 ஆயிரத்து 500 முன்னாள் போராளிகள் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இவர்களுக்கு மேசன் தொழில், தச்சுத் தொழில், வாழ்க்கைத்திறன் போன்ற பல பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

சுதந்திர தினத்தை முன்னிட்டு புனர்வாழ்வளிக்கப்பட்ட ஒரு தொகுதி முன்னாள் போராளிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இதேவேளை, வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் மேசன் தொழில் டிப்ளோமா பயிற்சியை நிறைவு செய்த முன்னாள் போராளிகள் 500 பேருக்கு இன்று திங்கட்கிழமை சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாகப் பிரிகேடியர் ரணசிங்க மேலும் தெரிவித்தார்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் கீழுள்ள பாதுகாப்பான தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு நிலையம் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?

ஒரு சிறுகதை சொல்லப் போகிறேன். இப்போது பேசிய சிறந்த பேச்சாளர், 'நாம் ஒருவரையொருவர் தூற்றுவதை நிறுத்த வேண்டும்' என்று கூறியதைக் கேட்டீர்கள். இவ்வளவு வேறுபாடுகள் இருப்பதற்காக அவர் வருத்தப்பட்டார். இந்த வேறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க ஒரு கதை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஒரு கிணற்றில் தவளை ஒன்று வாழ்ந்தது. நீண்ட காலமாக அங்கு அது வசித்து வந்தது. அங்கேயே பிறந்து அங்கேயே வளர்ந்த அந்தத் தவளை சின்னஞ் சிறியது. அது கண்களை இழந்து விட்டதா, இல்லையா என்று சொல்வதற்கு, நல்லவேளையாக அங்கே பரிணாமவாதிகள் யாரும் இல்லை. நம் கதைக்காக, அதற்குக் கண்கள் இருந்தன என்றே வைத்துக்கொள்வோம். அந்தத் தவளை நாள்தோறும் நீரிலிருந்து புழு, பூச்சிகளையும் கிருமிகளையும் மிகவும் சுறுசுறுப்பாக அகற்றிச் சுத்தப்படுத்தியது. அந்தச் சுறுசுறுப்பு, நம் தற்காலக் கிருமி ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தால் அது அவர்களுக்குப் பெருமை தரும் விடயமாகும். அவ்வாறே வாழ்ந்ததால் அந்தத் தவளை சிறிது பருத்தும் விட்டது.



யா/ வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தின் தரம் 1 மாணவர்களின் கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரபல சமூகசேவையாளனும் கிராமசேவையாளருமாகிய சி.சிவபாலசிங்கம் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் விருந்தினர்கள் மற்றும் வித்தியாலய அதிபர் 'திருமதி தேவராணி நவரட்ணம் ஆகியோர் ஆசிரியர் , மாணவர்களினால் வரவேற்கப்படுவதையும் தரம் 2 மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

# இந்திய - பாகிஸ்தான் புலனாய்வு பிரிவு இணைந்து செயற்படத் திட்டம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள உலகக்கிண்ண துடுப்பாட்ட போட்டிகளின்போது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இந்திய மற்றும் பாகிஸ்தான் புலனாய்வுப்பிரிவுகள் இணைந்து செயற்பட திட்டமிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

உலகக்கிண்ண போட்டிகளில் பங்குபற்றும் அணி வீரர்களின் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்தவும் அவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புக்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளவும் இந்திய மற்றும் பாகிஸ்தான் புலனாய்வுப்பிரிவினர் இலங்கை வந்துள்ளனர்.

இந்தியாவின் புலனாய்வு அமைப்பான றோ மற்றும் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகளே கொழும்பு வந்துள்ளதாக இலங்கை இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளைச் சேர்ந்த அணிகளின் வீரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே அவர்கள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# கண்காட்சியும் புதிய வகுப்புகளும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவு சமூகக்கற்கை நிலையத்தில் கண்காட்சியும் புதிய வகுப்புகளும் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்களும் புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்களும் அன்றைய தினம் மதியம் ஒரு மணிக்கு கலாஷேத்திரா கல்வி நுண்கலை வளாகம், ஊரெழு மேற்கு, ஊரெழு என்ற முகவரிக்கு வருகை தந்து பாடநெறியில் இணைந்துகொள்ள முடியுமெனவும் அத்துடன் இக் கண்காட்சியை இலவசமாகப் பார்வையிட முடியுமென்வும் நிறுவனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள்

பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகும் ஆண்டின் முதலாம் தவணையில் வசதி குறைந்த மாணவர்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒவ்வொரு வருடமும் அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்கி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இம்முறை வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, சரவணை, நாரந்தனை, எழுவைதீவு, அனலைதீவு, செட்டிப்புலம், துறையூர், தம்பாட்டி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த 25ஆம்திகதி நடைபெற்ற முதலாம் நாள் நிகழ்வில் வேலணை, சரவணை, நாரந்தனை ஆகிய பிரதேச பாடசாலைகளாகிய வேலணை கிழக்கு மகா வித்தியாலயம், செட்டிப்புலம் அ.த.க. தெற்கு பாடசாலை, வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம் , நாரந்தனை கணேச வித்தியாலயம், நாரந்தனை றோ.க.மகாவித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு கொப்பிகள், எழுதுகருவிகள் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் கடந்த 26 ஆம்திகதி புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த புங்குடுதீவு மகாவித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம், கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்,சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தியாலயம், சரவணை சின்னமடு றோ.க. த.க.பாடசாலை, தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 400 மாணவர்களுக்கு கொப்பிகள், எழுதுகருவிகள் போன்றவை வழங்கப்பட்டன.

இவற்றினை மகளிர் அபிவிருத்தி நிலையம் ஒவ்வொரு பாடசாலை அதிபர்கள் மூலம் வழங்கியுள்ளது. இந்நிகழ்வில், மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன், நிலைய திட்ட அலுவலர்களான நிஷானா, நகுலேஸ்வரி, சர்மிளா ஆகியோர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

# நிதிப்பற்றாக்குறை காரணமாக சிறுவர்களை பராமரிப்பதில் சிரமம்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் தெரிவிப்பு

நிதி பற்றாக்குறை காரணமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொறுப்பில் உள்ள சிறுவர்களை பராமரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது அதிகார சபை பாரிய நிதிப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இதன் காரணமாக சிறுவர் இல்லங்களில் தங்கியுள்ள சிறுவர்களை பராமரிப்பதற்காக தொடர்ந்தும் மக்களின் ஒத்துழைப்பினை எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு நிதி உதவிகள் செய்ய விரும்புவோர் 1929 என்ற சிறுவர் உதவி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி அது பற்றிய தகவலை பெற்றுக் கொள்ள முடியும் என சட்டத்தரணி அனோமா திஸாநாயக்க தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# பதிவுத் தபாலில் ஏற்படும் தாமதத்தை குறைப்பதற்கான விசேட திட்டம்

பதிவுத்தபாலில் ஏற்படும் தாமதத்தை குறைப்பதற்கான விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக தபால்மா அதிபர் எம்.கே.வி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசத்துக்கு மகுடம் கண்காட்சியை ஒட்டி இந்த விசேட செயற்றிட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுத்தபால்கள் பற்றிய விபரங்கள் ஒவ்வொரு தபால் நிலையத்திலும் குறிப்பிடப்படுவதால் அதனை விநியோகிப்பதில் தாமதம் ஏற்படுவதாக தபால்மா அதிபர் சுட்டிக்காட்டினார்.

பார்கோட் முறைமை மற்றும் நவீன தொலைத்தொடர்பு வசதிகளை இந்தத்திட்டத்துக்காக பயன்படுத்தவும் தபால் திணைக்களம் உத்திதேசித்துள்ளது.

இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ள மென்பொருளை மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கியுள்ளதாகவும் தபால்மா அதிபர் எம்.கே.வி.திஸாநாயக்க தெரிவித்தார். (ஸ்ரீ-9)

# திருமலை உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் பெண் வேட்பாளர்கள் போட்டி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சித் தேர்தலில் முஸ்லிம் பெண்கள் முதன்முறையாக போட்டியிடுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஏழு முஸ்லிம் பெண் வேட்பாளர்கள் திருகோணமலை, கிண்ணியா நகரசபை மற்றும் பிரதேச சபைத் தேர்தல்களில் போட்டியிடுகின்றனர்.

இந்த ஏழு பேரும் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பெண்களுக்கான சுயதொழில் அபிவிருத்தி, குழந்தைகளுக்கான முன்பள்ளி வாய்ப்புக்கள், உள்ளூர் வீதிகள் உட்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமது தேர்தல் பரப்புரை அமைந்துள்ளதாக வேட்பாளரில் ஒருவரான செலபாடீன் அலீன் பி.பி.சிக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, திருகோணமலை மாவட்டத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியே வெற்றியீட்டும் என அக்கட்சி சூளுரைத்துள்ளது.

கிண்ணியா நகரசபை மற்றும் பிரதேச சபைத் தேர்தலில் தாம் நிச்சயம் வெற்றியீட்டுவோம் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூதூர் இணைப்பாளர் நாஜீப் ஏ.மஜித் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடத்தத் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் சந்திரிகா ஆஜராகவுள்ளார்

(கொழும்பு)

கடந்த காலங்களில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில், இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அமைக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக்குழு முன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆஜராகவுள்ளார்.

சாட்சியம் வழங்க ஆணைக்குழு முன் ஆஜராகின்றமைக்கு, நேரத்தை ஒதுக்கித் தருமாறு அவர் கோரியுள்ளார்.

இத்தகவலை ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இங்கிலாந்து அணியை வீழ்த்தி ஆஸி. தொடரைத் தனதாக்கியது

(பிரிஸ்பேன்)

முன்னணி வீரர்களின் சொதப்பலான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணி 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 4:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர், 2 'இருபது - 20' போட்டிகள் மற்றும் 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற 'இருபது - 20' தொடரில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றி பெறத் தொடர் சமனிலையானது.

இந்நிலையில் தொடர்ந்து நடைபெற்ற ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் நான்கு போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலிய அணி 3:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இத்தொடரின் ஐந்தாவது போட்டி நேற்று பிரிஸ்பேனில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வோக்ஸின் துல்லியமான வேகத்தில் சிக்கி 49.3 ஓவர்களில் 249 ஓட்டங்களை எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் 74 பந்துகளில் (5 பவுண்டரிகள் உட்பட) 54 ஓட்டங்களையும் ஹடின் 37, டேவிட் ஹசி 34, சிமித் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வோக்ஸ் 10 ஓவர்கள் பந்து வீசி 45 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் அன்டர்சன், பின், கொலின் வூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.



பதிலுக்கு 50 ஓவர்களில் 250 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முன்னணி வீரர்கள் சோபிக்காத நிலையில் 45.3 ஓவர்களில் 198 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் திரோட் 40 ஓட்டங்களையும் பெல் 36, பின் 35, அன்டர்சன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஷேன் வோட்ஷன் 3 விக்கெட்டுக்களையும் பிரெட்லி, பொல்லிங்கர், ஹேஸ்ரிங்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சிமித் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் பந்துவீச்சில் பிரகாசித்த இங்கிலாந்து வீரர் வோக்ஸ் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி ஒருநாள் தொடரை 4:1 என்ற கணக்கில் தனது சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை இழந்த சோகத்திற்கு ஆறுதல் தேடியது.

# ஆஸி. ஓபன் டென்னிஸ் டோகோவிச் சம்பியன்



அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவாக் டோகோவிச் சம்பியனானார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் இந்த ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் தொடர் நடந்தது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில், உலக டென்னிஸ் தரவரிசையில் மூன்றாவது இடத்திலுள்ள செர்பியாவின் டோகோவிச் ஐந்தாவது இடத்திலிருக்கும் இங்கிலாந்து ஆண்டி முர்ரேவை எதிர்கொண்டார்.

முன்னணி வீரர் ரோஜர் பெடரரை வீழ்த்திய உற்சாகத்தில் களமிறங்கிய டோகோவிச் ஆரம்பத்திலிருந்தே அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முதற் செட்டை 6:4 என்று கைப்பற்றிய டோகோவிச் இரண்டாவது செட்டிலும் முழுமையாக ஆதிக்கம் செலுத்தினார். இதில் 6:2 என்று எளிதாக வென்றார். அடுத்த செட்டில் ஆண்டி முர்ரே எழுச்சி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து ஆண்டி முர்ரே செய்த தவறுகள் டோகோவிச்சிற்குச் சாதகமாக அமைந்தன.

இதனால் மூன்றாவது செட்டையும் 6:3 எனக் கைப்பற்றினார். இறுதியில் டோகோவிச் 6:4, 6:2, 6:3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார்.

கடந்த ஆண்டு நடந்த இறுதிப் போட்டியில் பெடரரிடம் தோல்வியடைந்த ஆண்டி முர்ரே தொடர்ந்து இரண்டாவது முறையாக இறுதிப் போட்டியில் தோல்வியுற்று வெளியேறியுள்ளார்.

**இரண்டாவது கோப்பை**

கடந்த 2008இல் அவுஸ்திரேலியன் ஓபன் கோப்பை வென்ற செர்பிய வீரர் டோகோவிச்சிற்கு இது இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் பட்டம்.

**நெஸ்டர் சம்பியன்**

கலப்பு இரட்டை இறுதிப் போட்டியில் கனடாவின் டேனியல் நெஸ்டர், கேட்ர்யனா (சுலோவேகியா) ஜோடி, ஹென்லே (ஆஸி.), யங் ஜன் (சீன தைபே) ஜோடியை 6:3, 3:6, 10:7 என்ற செட் கணக்கில் வீழ்த்திக் கோப்பை வென்றனர்.

**75 ஆண்டுச் சோகம்**

கிராண்ட்ஸ்லாம் அரங்கில் இங்கிலாந்தின் சோகம் தொடர்கிறது. இம்முறை எப்படியும் பட்டம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஆண்டி முர்ரே மீண்டும் தோல்வியடைந்தார். கடந்த 1936 யு.எஸ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் தொடரில் இங்கிலாந்தின் பிரட் பெர்ரி கோப்பை வென்றார். அதன்பின்னர் கடந்த 75 ஆண்டுகளாகக் கிராண்ட்ஸ்லாம் தொடரில் இங்கிலாந்து வீரர்கள் யாரும் பட்டம் வென்றதில்லை.

# பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிம் கிளைஸ்டர்ஸ் சம்பியன்



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ், பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதன்முறையாக சம்பியனாகிச் சாதித்தார் பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ். நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் சீனாவின் லி நாவை வீழ்த்தினார்.

மெல்பேர்னில் அவுஸ்திரேலியன் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் உலகின் நம்பர் - 3 வீராங்கனையான கிளைஸ்டர்ஸ், லி நாவை எதிர் கொண்டார்.

**முதல் முறை**

விறுவிறுப்பான முதல் செட்டை லி நா 6:3 எனக் கைப்பற்றினார். பின்னெழுச்சி கண்ட கிளைஸ்டர்ஸ் இரண்டாவது செட்டை 6:3 எனத் தன்வசப்படுத்திப் பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கிளைஸ்டர்ஸ் 3:6, 6:3, 6:3 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று அவுஸ்திரேலியன் ஓபனில் முதன்முறையாகச் சம்பியனானார்.

**சூப்பர் அம்மா**

கடந்த 2007இல் கூடைப்பந்து வீரர் பிரையான் லின்ச்சைத் திருமணம் முடித்த கிளைஸ்டர்ஸ் டென்னிஸிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். 2008இல் பெண் குழந்தைக்குத் தாயானார்.

பின் 2009இல் 'அம்மா' அந்தஸ்துடன் மீண்டும் டென்னிஸிற்குத் திரும்பிய இவர் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 2009, 2010இல் யு.எஸ்.ஓபனில் பட்டம் வென்றார். தற்போது அவுஸ்திரேலிய ஓபனிலும் கோப்பை வென்றுள்ளார். ஒரு குழந்தைக்கு அம்மாவான நிலையில் தொடர்ந்து அசத்திவரும் இவர் தனது நான்காவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய சீன வீராங்கனை லி நா இரண்டாவது இடம்பிடித்து ஆறுதலடைந்தார்.

**ஆஸி., கிம்**

அவுஸ்திரேலிய ஓபனில் கோப்பை வென்றுள்ள கிளைஸ்டர்ஸ் விரைவில் வெளிவரவுள்ள சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறக் காத்திருக்கிறார். தனது மகத்தான வெற்றி குறித்து கிளைஸ்டர்ஸ் கூறுகையில்,

"அவுஸ்திரேலியன் ஓபனில் பட்டம் வென்றதன் மூலம் ரசிகர்கள் இனி என்னை 'ஆஸி., கிம்' என்று அழைக்கலாம்" என்றார்.

**பயஸ் - பூபதி ஏமாற்றம்**

அவுஸ்திரேலியன் ஓபன் ஆண்கள் இரட்டையர் இறுதிப்போட்டியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி அமெரிக்காவின் பாப், மைக் பிரையன் சகோதரர்களைச் சந்தித்தது. இதில் பயஸ் - பூபதி ஜோடி 3:6, 4:6 என்ற நேர் செட்டில் தோல்வியடைந்து இரண்டாவது இடம்பிடித்தது.

இதன்மூலம் அமெரிக்க ஜோடி ஐந்தாவது முறையாக (2006 - 07, 2009 - 11) சம்பியன் கோப்பை வென்று சாதித்தது. தவிர, 'ஹட்ரிக்' பட்டம் (2009 - 11) வென்ற நடப்புச் சம்பியன் அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொண்டது.

## ...போர் வெடிக்கும்... கலைஞர்...

...இலங்கையில் தமிழர் வசிக்கும் பகுதிக...குச் சென்ற வழக்கறிஞர் கயல்விழி, ...ாகரனின் தாயை சந்தித்துள்ளார். தமிழ் ...டில் இருந்து வந்திருக்கிறேன் என்று கூறி ... அந்த தாய் கண்கலங்கி உள்ளார். ஈழத் த...ர்களின் போராட்டம் முடிபுக்கு வரவில்...

பிரபாகரன் உயிருடன் இருக்கிறார். த...ந்த நேரத்தில் அவர் மக்கள் மத்தியில் தோ...ன்றுவார். இலங்கையில் மீண்டும் போர் வெ...டிக்கும். நம் கண் முன்னே தமிழ் ஈழம் ம...ரும் என வைகோ கூறியதாக தமிழ்நாட்டு செ...ய்திகள் தெரிவித்தன. (ச-5)

...வுள்ளது.

தமிழக அரசின் உள்துறை அமைச்சுக்கு பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் கருணாநிதி இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேற்று விமானம் மூலம் புதுடில்லி சென்றார். இந்நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நாளை சந்தித்து பல்வேறு விவகாரங்கள் குறித்த ஆலோசனை நடத்தவுள்ளார்.

இச்சந்திப்பின் போது இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக தாக்கப்பட்டு வரும் நிகழ்வுகளை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்படி பிரதமர் மன்மோகன் சிங்கை வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## ...மாலை 6 மணி...

...சந்திகள், வீதிகள் மற்றும் பொது இடங்க...ில் மாலை 6 மணிக்குப் பின் தேவையற்ற விதத்தில் கூடுதல் அல்லது நடமாடுதல் த...க்கப்படல் வேண்டும்.

ஆட்டோ தரிப்பு நிலையங்களில் சாரதிகளைத் தவிர வேறு எவரும் நிற்பது தவிர்க்கப்படல் வேண்டும்.

மது போதையில் வாகனம் செலுத்துதல், கூட்டமாகச் சைக்கிள்களில் பயணிப்பது என்பனவும் நிறுத்தப்படல் வேண்டும்.

பெண்கள் மீது சேஷ்டை புரிபவர்கள் வீதிகளில் மோதலில் ஈடுபடுபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார். இதேவேளை 24 மணி நேரத்திலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்குப் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் களவு, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக உடனடியாக முறையிடுமாறும் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் கூறினார். (எ)

# தமிழரின் அபிலாஷைகளை எதிர்கொள்ள உள்ளூராட்சி தேர்தல் வெற்றி அவசியம்

## மாவை.சேனாதிராஜா எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்குப் பகுதி முழுவதும் தமிழ்தேசிய இனத்தின் அபிலாசைகள் மீண்டும் உறுதிப்படுத்தபடகூடிய உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான வழிகாட்டல் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது, சகல உள்ளூராட்சி சபைகளில் உள்ள நிர்வாகங்களையும் நாம் கைப்பற்றுவதன் மூலம் மக்கள் மத்தியில் நின்று சேவையாற்றும் வாய்ப்பு எமக்கு கிடைக்கும்.

அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தைக்கான பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகிறது.

பேச்சு வார்த்தைகளில் நாம் பலமுடன் இருக்க இந்தத் தேர்தல் வெற்றி எமக்கு மிகவும் ஆதாரமானதாக அமையும்.

எனவே எல்லா வேட்பாளர்களும் ஒற்றுமையாக ஒரே அணியாக நின்று வெற்றிபெற செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் அவர்கள் உரையாற்றுகையில்,

நீண்ட காலத்திற்கு பின்பு எமது மக்கள் நகரசபை மற்றும் பிரதேச சபை தேர்தல்களை சந்திக்கின்றனர். தேர்தல் நடைமுறைகள் பற்றிய தெளிவற்ற நிலை மக்கள் மத்தியில் இருப்பது இயற்கையே. மக்களுக்கு உரிய விளக்கங்களை வழங்கி அவர்களை முழுமையாக வாக்களிக்கச் செய்வது



வேட்பாளர் களினது கடமையாகும்.

தேர்தலின்போது தமிழினத்தின் அபிலாசைகளை முன்னிலைப் படுத்தும் அதேநேரம் சகல உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களும் தத்தமது பகுதிகளின் தேவைகளை இனங் கண்டு அவற்றை பூர்த்தி செய்வதற்கு ஏற்ற அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் விஞ்ஞாபனங்களை உடன் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ச-6)

## ஜனாதிபதி மகிந்த...

ராட்சித் சபைத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் இத் தொலைபேசி உரையாடலில் கலந்துரையாடப்பட்டதாக தெரியவருகின்றது.

ஆளும்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தாக்கல் செய்திருந்த வேட்பு மனுக்களில் 34 மனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்தும் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை மீண்டும் ஏற்றுக்கொள்ளும் வகையில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் எதிர்க்கட்சியின் ஒத்தாசையைப் பெற்றக்கொள்வது குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சித் தலைவருடன் தொலைபேசியில் கலந்துரையாடியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இரு தரப்பிலும் நிராகரிக்கப்பட்டுள்ள வேட்பு மனுக்கள் தொடர்பாக நீதிமன்றத்தை நாடும் போது இரு தரப்புகளும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் நடந்து கெ குறித்து ஜனாதிபதி மகிந்த ரா கலந்துரையாடிய தாக செ அரசியல் வட்டாரங்களில் தெரியவருகிறது.

ஆனால் இவ்விடயம் தெ எதிர்க்கட்சித் தலைவர் ரணி கிரமசிங்க அதற்கு எவ்வாற லை வழங்கினார் என்பது பில் தகவல்களை எதுவும் இ வெளியாகவில்லை.

இதேவேளை முன்னதா திபதி மகிந்த ராஜபக்ஷ வேட் கள் நிராகரிக்கப்பட்டமை பில் கட்சியின் வேட்பாளர் நி குழுவை அலரி மாளிகைக தித்திருந்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜப கும் எதிர்க்கட்சி தலைவர் விக்கிரமசிங்கவுக்கும் இ கடந்த காலங்களில் நன தேர்தல்களுக்கு முன்னரும் ரும் ஜனாதிபதி மாளிகையி தியேக கலந்துரையாடல்க திப்புக்களும் இடம்பெற்றிரு யும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய வெளியுறவுச் செய...

அந்தமக்கள் அனுப்பிவைத்துள்ளார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் மகஜர் அனுப்பியுள்ள இந்தப் பகுதிமக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என் சிவசக்தி ஆனந்தனை சந்தித்து தமது மீள்குடியேற்றம் தொடர்பில் நட வடிக்கை எடுக்க வேண்டும் என கோரியிருக்கிறார்கள்.

இந்த மக்களின் கோரிக்கை குறித்து அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையே வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள சந்திப்பின்போது பேச்சுக்கள் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கூறினார்.

போர் நடைபெற்ற வன்னி பிரதேசத்தை சேர்ந்த பகுதிகளில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டதும் அந்த இடங்களில் மக்களை அரசு மீள்குடியேற்றம் செய்துவருகின்றது.

இடம்பெயர்ந்து மனிக்பாம் முகாமில் தங்கியுள்ள சுமார் 20 ஆயிரம்பேர் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

எனினும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள போதிலும், முறிகண்டி பிரதேசத்தில் அரசாங்கம் தனது தேவைக்காக குடியிருப்புக் காணிகளை எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

இதனை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களும் அரசியல் கட்சிகளும் ஆட்சேபித்திருந்தன. அத்துடன் கடந்தமுறை இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுத்துறை செயலாளரின் கவனத்திற்கும் இந்த விடயம் கொண்டுவரப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த நடவடிக்கைகளை தொடர்ந்து முறிகண்டி பிரதேசத்தின் ஒரு சில பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரதேசத்தின் மீள்குடியேற்றம் இன்னும் முற்றுப்பெற வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வான்...

சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர்கள் நெல்லயடிப் பகுதியிலிருந்து தமது இடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், ஹயஸ் வானை செலுத்தியவர் மதுபோதையில் இருந்ததாகவும் அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

வான் சாரதி கைது செய்யப்பட்டு பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ச-5,24)

## நிருபமா ராவ்...

அவர் வலியுறுத்துவார் என இந்திய செய்திகள் தெரிவித்தன.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்து தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் நிருபமா ராவ் இலங்கை வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## புலிகளை தோற்கடிக்க...

உள்ளூர்உற்பத்தியில்நான்குசதவீதம் பாதுகாப்புக்காக செலவிடப்பட்டது. விமானங்கள், கப்பல்கள், டாங்கிகள், ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு, படையினருக்குபயிற்சி, படையினருக்குஉணவு மற்றும் உடைகள் ஆகியவற்றுக்கு பெரும்நிதி செலவிடப்பட்டது.

விடுதலைப்புலிகள் திறமையான வரிசேகரிப்பு பொறிமுறையொன்றை கொண்டிருந்தனர். இதன் மூலம் கிடைக்கும் நிதி மூலமாகவே அவர்கள் செயல்பட்டனர். இதற்குப் புறம்பாக மக்களிடம் உணவை, வீட்டை, சேவையை, காணிகளை, நகைகளை பெற்றே தமது செயற்பாட் னெடுத்தனர். கிளிநொச்சி வங்கி என்ற பெயரில் வங்கிச் ஒன்றை விடுதலைப்புலிக படுத்தினர். உலகில் பல நா பெற்றோல்நிலையம், பலசரக் யம், வீடியோநிலையம், போக் ஏஜென்சி, தொலைத்தொட யம்போன்றவற்றை புலிகள் ந

1996ஆம் ஆண்டு ஜ ஆம் திகதி நடத்தப்பட்ட தற் தாக்குதலில் 41 மத்தியவங் யர்கள் கொல்லப்பட்டனர். 9 மக்கள்கொல்லப்பட்டனர்.1400 மடைந்தனர் என்றார் அவ

## அரசுக்கு எதிராக...

போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அரசாங்கத்திற்கு எதிர்காலம் ஒன்று இல்லை. இந்த அரசாங்கத்தை பதவியிலிருந்து நீக்குவதற்கு இந்த மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

துனீசியா போன்று இலங்கையிலும் கலகம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. ஒரு கிலோ அரிசியின் விலை 125 ரூபாயாக உயர்வடையக் சு தியம் காணப்படுகின்றது. இ பொருட்கள் சேவைகளுக்கா உயர்வடைந்தால் கிளர்ச்சி கூடும் சித்திரை புத்தாண்டு கா யில் அரிசிவிலை அதிகரிக்கக்கூ தியம் காணப்படுகின்றது என அ வித்துள்ளார்.

## 'நான் குற்றவாளியானால்...

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தன் மீது சுமத்தப்பட்டு வருகின்ற போர்க் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார்.

அமெரிக்காவில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே தன்மீதான போர்க்குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்துள்ளார்.

வன்னி இறுதிக்கட்ட போரின் போது அப்பாவி தமிழ் மக்களை படைத்தரப்பினர் கொன்றதாக வெளிவரும் செய்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு அவர் அங்கு கூடியிருந்த மக்களிடம் கேட்டுக் கொண்டதோடு விடுதலைப் புலிகளே தமிழ் மக்களை தமது பாதுகாப்பு கவசமாக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து தமிழ் மக்களை படைத்தரப்பினரே காப்பாற்றினர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்கு வரமுயன்ற தமிழ் மக்களை விடுதலைப் புலிகளே சுட்டனர்.

இவரின் உரை முடிந்து இடம் பெற்ற கேள்வி நேரத்தின்போது இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சுபா சுந்தரலிங்கம் என்பவர் சர்வதேச அனு சரணையுடன் வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைய வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை சுட்டுக்கொல்லுமாறு உத்தரவிட்டதாக சவேந்திர சில்வா மீது நேரடியாக குற்றம் சுமத்தினார்.

இக் குற்றச்சாட்டை மறுத்த சவேந்திர சில்வா, தான் ஒரு போர் குற்றவாளியாக இருந்தால் ஒரு நாள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அற்குரிய தண்டனையை அனுபவிப்பேன் எனக் குறிப்பிட்டார்.

அத்துடன் இக் கேள்வியைக் கேட்டதுக்காக தான் மகிழ்ச்சியடைவதாகவும் உங்களைப் போன்ற துணிவான இலங்கையர்கள் இருப்பது குறித்து தான் பெருமையடைவதாகவும் அவர் கூறினார்.

போரின் போது அப்பாவி மக்களை சுட்டுக்கொன்றதா றம் சுமத்தப்பட்ட படையின கைது செய்யப்பட்டுள்ளனர். தத்தில் விடுதலைப் புலிகளின் கரவாதத்திலிருந்த தமிழ் மக்க காப்பாற்றுவதில் படைத்தர மனிதாபிமான முறையில் பட்டார்கள்.

வன்னிப் போரின் போ தாபிமான சட்டங்கள் மீறப்ப பின் அது ஒருநாள் வெளி 2009ஆம் ஆண்டு விடுத புலிகளின் தற்கொலைத் தா லிலிருந்து தான் தப்பியது குற்றமற்ற தன்மையின் பாடே.

போர்க்குற்றச்சாட்டுக்களை துபவர்கள் ஜனாதிபதியால் நி கப்பட்ட உண்மைகளை கல வதற்கான நல்லிணக்க ஆன குழுவின் விசாரணை அறி வெளிவரும் வரை பொறுமை இருக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.


# மரண அறிவித்தல்

## திருமதி சிறீகாந்தராசா பராசக்தி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், ஜி.பி.எஸ். லேன், கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிறீகாந்தராஜா பராசக்தி நேற்று (30.01.2011) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலம் சென்ற சிறீகாந்தராசாவின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான திருநாயகம், சபாபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சங்குவதி, செல்லம்மா, விசுவநாதன் ஆகியோரின் மைத்துனியும் தில்லம்மாவின் சகலியும், சிறிகாந்த தேவி (யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க அச்சகம்), சிறீபத்மநாதன் (வேலணை பிரதேசசபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசேஸ்வரி (உபதபால் அதிபர், ஆனைப்பந்தி) அவர்களின் அன்பு மாமியாரும் சிறி லக்ஷனின் (யா/பொஸ்கோ, 5ஆம் ஆண்டு மாணவன்) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2011) திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஜி.பி.எஸ். ஒழுங்கை, கல்வியங்காடு

தகவல்
சிறீபத்மநாதன் (மகன்)

இ



நல்லின பப்பாசி
Red Lady
விற்பனைக்குண்டு

இல.18, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் நல்லின பப்பாசிகள் (Red Lady) விற்பனைக்கு உண்டு.

இ



நிழல் அல்ல; நிஜம்!!

ஒரே வாரத்திலே!

- உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிறம்! முகப்பருக்கள், முகச்சுரு கருவளையம், உதடுகருமை நீக்கம், கழுத்து கருமை நீக்கம், தழும்புகள் போ வற்றிற்கான சிகிச்சைகள்.
- வயிறு மற்றும் இடுப்பு, கைத்தசைகள் குறைப்பதற்கான சிகிச்சைகள் மற்றும் உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல், முடி உதிர்வு, இளநரை போன்றவற் கான சிகிச்சைகள்,

"முற்றிலும் இயற்கை மூலிகைச் சிகிச்சைகள்" "WE CARE ALWAY

பதிவுகளை முற்கூட்டியே தெரிவிக்க அழையுங்கள்: 0777351954, 07740

SANEYA BEAUTY PALACE

132, KACHCHERI NALLUR ROAD, JAFFNA (கிட்டுப்பூங்கா அருகாமை


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2011 இல் அச்சிட்டு வெளியிட